விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஹூ பங்குனி மீ 08-ம் உ | புதன்கிழமை | (21 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 23 | ஓசை 31

## வடக்கிலிருந்து கடைசி ஜவானும் பயணம்!

(யாழ்ப்பாணம்)

வடபகுதியான யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த இரண்டரை வருடங்களாக நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப்படையினரது கடைசிப் பிரிவினர் நேற்றுக் காலை 9 30 மணிக்கு காங்கேசன் துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர். இவ் வழியனுப்பு வைபவத்தில் இலங்கை இராணுவத்தின் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்ரன் ரணசிங்கா, அமைதிப்படையின் பொறுப்பதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் கல்கட் ஆகியோர் கலந்து கொண்டனர். கிழக்கிலுள்ள இந்திய இராணுவத்தின் கடைசி அணி எதிர்வரும் சனிக்கிழமை திருமலையிலிருந்து வெளியேறுமென கல்கட் முன்னே தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## 25,000 விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றன

(சுதுமலை)

யாழ். மாவட்ட மேலதிக பதிவாளர் அலுவலகத்தில் இன்னும் இருபத்தையாயிரம் விண்ணப்பங்களுக்குரிய பிறப்பு, இறப்பு, விவாக அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கும் வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் இருக்கின்றன. ஏறத்தாழ ஐம்பதினாயிரம் பிரதிகள் எழுத வேண்டிய நிலையில் இருக்கின்றது. இந்நிலையில் எழுதிக் கொடுக்கும் படிவங்கள் இங்கு இல்லாமையும், போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரம் பழுதடைந்திருப்பதாலும் எதிர்வரும் 26.3.90 திங்கட்கிழமை தொடக்கம் பிறப்பு, இறப்பு, விவாக அத்தாட்சிப் பத்திரங்களுக்கான

(6 ஆம் பக்கம்பார்க்க)

## குடியேற்றத்திட்டம் பற்றி பாலா

திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தினால் திருக்கோணமலையில் தமிழ் மக்கள் மத்தியில் பெரும்அச்சம் நிலவுகிறது இதனால் சிங்களக் குடியேற்றத்தை நிறுத்தும் படி அரசைக் கேட்டிருக்கிறோம் அரசும் ஒப்புக் கொண்டிருக்கிறது. இந்தியப் படைவிலகிய பின்மீளக் குடியமாத்தல் பற்றி ஆலோசிப்போம்''

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 6 வது திருத்தம் நீங்கினால்

# "அஸ்ரப் தலைமைக்கு ஆபத்து என அச்சம்"

(யாழ்ப்பாணம்)

- கலாநிதி பாலா

இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கிவிட்டால் பின்னர் நடைபெறும் தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியை மட்டுமே முஸ்லிம் மக்கள் தெரிவு செய்வார்களென்பது ஜனாப் அஷ்ரப்புக்கும் அவரது இலங்கை முஸ்லிம் காங்கிரசுக்கும் நன்கு தெரியும். இதனால் அஷ்ரப்பின் தலைமை வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல இலங்கையிலேயே காணமல் போய்விடும். இந்த அச்சத்தினால்தான் ஆறாவது திருத்தத்தை நீக்கக் கூடாது என்றும் இத் திருத்தத்தை நீக்கும் நடவடிக்கையை எதிர்க்கப்போவதாகவும் அஷ்ரப்பும், அவரது முஸ்லிம காங்கிரசும் கூறிவருகிறாகள்.

இவ்வாறு தமிழீழ விடுதலை புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று 'ஈழநாதம்' பத்திரிக்கு அளித்த பிரத்தியோகப் பேட்டியில் தெரித்தார்.

நான்கு முக்கிய பிரச்சினை பற்றி கலாநிதி பாலசிங்கத்திடம் நேற்று 'ஈழநாதம்' பிரதிநிதி விளக்கம் கேட்டார். இதற்கு அவர் அளித்த பதில்ளைச் சுருக்கமாக இங்கு தருகிறோம்.

லில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ள ஒரே இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் என்பதை முஸ்லிம் மக்களே ஏற்றுக்கொண்டுள்ளதால் அவர்களே தெரிவு செய்யப்படுவார்களெனபது அஷ்ரப்புக்குநன்கு தெரியும். இது தவிர முஸ்லிம் மக்களுக்குக கொழும்பிலி

(6 ஆம் பக்கம் பார்க்க)



## மாணவர்கள் அட்டாகாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பரியோவான் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் தற்போது நகரில் பெரும் ஆர்ப்பாட்டங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# "சகலமக்களும் இணையும் அமைப்பே எமது கட்சி"

## மக்கள் முன்னணி அலுவலகத்தை திறந்துவைத்து மகேந்திரராசா உரை

(கோண்டாவில்)

கடந்த பதினேழு வருடங்களாக இடம்பெற்ற போராட்ட வேளையில் அரசியல் பிரிவாக இருந்து செயற்பட்ட அமைப்பை இன்று நாம் அரசியற் கட்சியாக உருவகக்கியுள்ளோம். இதன் சிறப்பம்சம் என்னவென்றால் சகல மக்களும் இதில் இணைந்து செயற்பட கட்சி அமைப்பு வழி வகுத்துள்ளது.

இவ்வாறு நேற்றுக் கோண்டாவிலில் அமைக்கப்பட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட தலைமைக் காரியாலயத்தை வைபவரீதியாகத்திறந்துவைத்துப் பேசிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா(மாத்தயா) கூறினார்

தொடர்ந்து பேசிய திரு. மாத்தயா எமது அரசியல் மாற்றத்தை மக்கள் இன்று சரியாகப் புரிந்து கொள்ள

(6 ஆம் பக்கம் பார்க்க)



## திறந்துவைத்து மகேந்திரராசா உரை

(கோண்டாவில்)

**கடந்த பதினேழு வருடங்களாக இடம்பெற்ற போராட்ட வேளையில் அரசியல் பிரிவாக இருந்து செயற்பட்ட அமைப்பை இன்று நாம் அரசியற் கட்சியாக உருவகக்கியுள்ளோம். இதன் சிறப்பம்சம் என்னவென்றால் சகல மக்களும் இதில் இணைந்து செயற்பட கட்சி அமைப்பு வழி வகுத்துள்ளது.**

இவ்வாறு நேற்றுக் கோண்டாவிலில் அமைக்கப்பட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட தலைமைக் காரியாலயத்தை வைபவரீதியாகத்திறந்துவைத்துப் பேசிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா(மாத்தயா)கூறினார்

தொடர்ந்து பேசிய திரு. மாத்தயா எமது அரசியல் மாற்றத்தை மக்கள் இன்று சரியாகப் புரிந்து கொள்ள

(6 ஆம் பக்கம் பார்க்க)



காங்கிரசுக்கும் நன்கு தெரியும். இதனால் அஷ்ரப்பின் தலைமை வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல இலங்கையிலேயே காணமல் போய்விடும். இந்த அச்சத்தினால்தான் ஆறாவது திருத்தத்தை நீக்கக் கூடாது என்றும் இத் திருத்தத்தை நீக்கும் நடவடிக்கையை எதிர்க்கப்போவதாகவும் அஷ்ரப்பும், அவரது முஸ்லிம காங்கிரசும் கூறிவருகிறாாகள்.

இவ்வாறு தமிழீழ விடுதலை புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று 'ஈழநாதம்' பத்திரிகைக்கு அளித்த பிரத்தியோகப் பேட்டியில் தெரிவித்தார்.

நான்கு முக்கிய பிரச்சினை பற்றி கலாநிதி பாலசிங்கத்திடம் நேற்று 'ஈழநாதம்' பிரதிநிதி விளக்கம் கேட்டார். இதற்கு அவர் அளித்த பதில்களைச் சுருக்கமாக இங்கு தருகிறோம்

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கும் எந்த நடவடிக்கையையும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கும் என்று ஜனாப் எம். எச். எம். அஷ்ரப்பின் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கை பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே கலாநிதி பாலசிங்கம் மேற்கண்டவாறு பதிலளித்தார். அவர் மேலும் கூறியதாவது:

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கியபின் நடைபெறவிருக்கும் தேர்தலில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ள ஒரே இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் என்பதை முஸ்லிம் மக்களே ஏற்றுக்கொண்டுள்ளதால் அவர்


(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்கள் அட்டாகாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பரியோவான் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் தற்போது நகரில் பெரும் ஆர்ப்பாட்டங்

(6 ஆம் பக்கம் பார்க்க)



நேற்றுக் காலை கோண்டாவிலில் நடந்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட தலைமைக் காரியாலயத் திறப்பு விழாவின்போது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தபோது எடுக்கப்பட்டபடம்.

## அமைச்சுச் செயலாளர் வேறு பதவி வகிக்கக் கூடாது

(கொழும்பு)

ராஜாங்க அமைச்சுச் செயலாளர்கள் வேறு பதவிகளை வகிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. செயலாளர்கள் சிலர், அரச கூட்டுத்தாபனங்களிலும் தலைவர் பதவிகளில் உள்ளவர்களாம்.

பொது நிர்வாக அமைச்சு இது தொடர்பான பணிப்புரைகள் அடங்கிய சுற்று நிருபம் ஒன்றை வெகு விரைவில் அனுப்பி வைக்கும் என்று அரசாங்கத் தரப்புப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## இடிதாக்கி குடும்பஸ்தர் மரணம்

(வவுனியா)

மழைபெய்து கொண்டிருந்த நேரம் இடிவிழுந்து நான்கு பிள்ளைகளின் தந்தை பலியானார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை செட்டி குளத்தில் நிகழ்ந்தது.

எஸ். செல்வராஜா (வயது 40)

(6ஆம் பக்கம் பார்க்க)

பிள்ளைபிடிகாரரிடமிருந்து

# பிள்ளைகளைக் காப்பாற்றி கல்வி, ஒழுக்கம் போதிக்கிறோம்

## ரஞ்சன் கூற்றுக்கு பாலா விளக்கம்

இளைஞர்களையோ சிறுவர்களையோ நாம் பலவந்தமாக எமது இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளவில்லை.

'பிள்ளை பிடிகாரர்' களிடமிருந்து தப்பியோடி எப்மிடம் வந்தவர்களும், அவர்களிடமிருந்து தமது பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காக ஆயிரக்கனக்கான பெற்றோர் தமது பிள்ளைகளை எம்மிடம் கொண்டுவந்து ஒப்படைத்தனர். இந்தப் பிள்ளைகளைக் காப்பாற்றிக் கல்விப்படிப்பும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எயர் லங்காவுக்கு நஷ்ட ஈடு

பிரான்ஸில் உள்ள நிறுவனம் ஒன்று ஒப்பந்தத்தை மீறிய குற்றச்சாட்டின் மீது ஏயர் லங்கா நிறுவனத்துக்கு ஒரு கோடி ரூபாவுக்கு மேல் (பதினைந்து லட்சத்து அறுவத்தையாயிரத்து தொண்ணூற்றி மூன்று பிரான்ஸ் பிராங்குகள்) நஷ்ட ஈடாக செலுத்துமாறு பிரான்ஸ் உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது.

# இலங்கையில் றோவின் நடவடிக்கைகளை விசாரிக்க வேண்டும்

## ராஜ்யசபையில் தி. மு. க. கோரிக்கை

(நியூ டெல்லி)

இலங்கையில் இந்திய புலனாய்வு நிறுவனமானறோவின் நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணை ஒன்றை மேற்கொள்ள அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமாறு தி. மு. க. பாராளுமன்ற உறுப்பினர் ராஜ்ய சபையில் வற்புறுத்தியுள்ளார் என இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

ராஜ்ய சபை, லோக சபை இரண்டினதும் கூட்டுக் கூட்டத்தில் இந்திய ஜனாதிபதி ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தின்போது வெள்ளியன்று பங்குகொண்டு பேசிய தி. மு. க. ராஜ்ய சபை உறுப்பினர் வி.கோபாலசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

றோ வின் இலங்கை நடவடிக்கைகள் மத்திய அரசின் உத்தரவின் பேரில் நடந்ததா அல்லது அது தன்னிச்சையாக செயற்பட்டதா என்பதை இந்த விசாரணை வெளிக்கொணர வேண்டும் என்று கோபாலசாமி தெரிவித்தார்.

றோ ராஜிவ் காந்தியின் பணிப்புரைக்கிணங்க இலங்கையில் செயற்பட்டதென்றும் இலங்கைத் தமிழரின் ஐக்கியத்தைக்குறைக்க றோ பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்துள்ளது என்றும் கோபாலசாமி குற்றம் சாட்டினார்.

(6-ஆம் பக்கம் பார்க்க)

## வடமராச்சி கிழக்கில் 7 புதிய கிராம சேவகர் பிரிவு

(வடமராச்சி கிழக்கு)

வடமராச்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிதாக ஏழு (07) கிராம சேவையாளர் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

முன்பு பதினொன்றாக (11) இருந்த கிராம சேவையாளர் பிரிவுகள் இத்துடன் பதினெட்டாக (18) அதிகரிக்கப்பட்டுள்ளன.

வெற்றிலைக்கேணி, ஆழியவளை, வத்திராயன், செம்பியன் பற்றுதெற்கு, நாகர்கோவில் கிழக்கு, பொற்பதி,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பெருமாளின் தாயார் ஒரிஸா முகாமில்

வடக்கு—கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளின் தாயார். அவரது நெருங்கிய உறவினர் ஏழு பேருடன் ஒரிஸாவில் உள்ள அகதிகள் முகாமில் தங்கியிருப்பதாக ஹிந்துஸ்தான் ரயிம்ஸ் பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது. இவர்களுடன் இந்த முகாமில் 1,612 தமிழ் அகதிகள் தங்கியுள்ளார்களாம்.

பெருமாள் எங்கிருக்கிறார் என்பது தனக்கு தெரியாதென்றும், ஆனால் அவர் இந்தியாவில் எங்கேயாவது ஓர் இடத்தில் தங்கியிருக்கலாம் என்று தான் நம்புவதாகவும் பெருமாளின் உறவினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

B-M.C. லொறி - 24/6431 24/3251, கார், மொறிஸ், ஒக்ஸ்போர்ட். S. மகேந்திரா, 34, ஆடியபாதம்வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்., 53, K.K.S. றோட், யயழ்ப்பாணம். B-126

கிருமிநாசினிகள், காய்கறி விதைகள், மண்வெட்டி பிடிகள் முதலியவற்றுக்கு தலை சிறந்த இடம் அக்றோ தவாஸ், 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (B-333)

### சமூகக்கல்வி

ஆண்டு 6 சமூகக்கல்வி வரலாறு செயல்நூல் விற்பனையாகிறது. ஆக்கம்: துரைசிங்கம். எல்லாப் புத்தக சாலைகளிலும் கிடைக்கும். சிறிகாந்த் புத்தகசாலை. யாழ்ப்பாணம். B/313

### நீரிழிவு

நீரிழிவு வியாதிகளுக்கு உகந்த தனிக் கோதுமை அரிசியில் தயாரிக்கப்பட்ட ஆட்டா மா, கோதுமை, அரிசிக் குறுணல், கோதுமை அரிசி றவை எங்களிடமும், பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். M- G. M. No. 777, K. K. S. Road, Jaffna. (B/67)

### சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள் செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-270)

### வாடகைக்கு

வீடியோ பிரதிகள் வாடகைக்கு விடப்படும். ஹப்பி வீடியோ சென்ரர், 613, பீச் றோட், குருநகர். (B- 335)


# விடுதலையான தொழிற் சங்கவாதிக்கு பாராட்டு

(மட்டக்களப்பு)

இந்திய அமைதிப் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட தொழிற்சங்கச் சம்மேளனச் செயலாளர் திரு. பொன். வேணுதாஸ்க்கு அண்மையில் சம்மேளனத்தினர் வரவேற்பு பசாரம் ஒன்றை அளித்தனர்.

மட்டக்களப்பு அரசடி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விழாவிற்கு சங்கத்தின் பதில் தலைவர் திரு. கே. சின்னத்துரை தலைமை வகித்தார்.

தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார விடுதலைக்காக உழைக்க கொள்கை வேறுபாடுகளை மறந்து தமிழ் தொழிலாளர்கள் ஓரணியில் திரள வேண்டுமென்று திரு. வேணுதாஸ் வேண்டுகோள் விடுத்தார்.

# நாட்டுப்பாடல் போட்டி

(பூநகரி)

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நாட்டுப் பாடல் போட்டி ஒன்றை உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் நடாத்துவதற்கு பூநகரி உதவி அரசாங்க அதிபர் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். இப் போட்டியானது கிராம சேவை அலுவலர் கோட்ட மட்டத்தில் நடைபெற்று அப்போட்டியில் தெரிவு செய்யப்படுவோர் உதவி அரசாங்க அதிபர் கோட்ட மட்டத்தில் நடைபெறும் போட்டியில் பங்குபற்றுவார்கள்.

'தமிழ், சிங்கள புத்தாண்டு' எனும் தொனிப் பொருளில் நாட்டுப் பாடல் பாடப்பட வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு என இரு பிரிவுகளாக நடாத்தப்படும் இப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் 7 - 4 - 90 க்கு முன் உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பப்படல் வேண்டும் என்றும், போட்டிகள் 14-4-90ஆம் திகதிக்கு முன் நடாத்தி முடிக்கப்பட்டு வெற்றியீட்டியவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும் என்றும் பூநகரி உதவி அரசாங்க அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய போக்குவரத்து ஒழுங்குகளைப் பேண 12 பேர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரப் பகுதிக்குள் இன்று முதல் அமுலுக்கு வரும் புதிய போக்குவரத்து ஒழுங்கு விதிகளைச் செயற்படுத்தப் பன்னிரெண்டு ஊழியர்கள் இடப்படுவர்.

இவர்களுக்கு மக்கள் தமது ஆதரவைத் தந்து அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என மாநகரசபை ஆணையாளர் வேண்டிக்கொள்கிறார்.

# மார்ச் 31 இல் அமைச்சர் வின்சன் வவுனியா வருவார்

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் வின்சன் பெரேரா எதிர்வரும் 31 ஆம் திகதி வவுனியா வரவுள்ளார். இவர் முதலில் 21 ஆம் திகதி வவுனியா வருவதாகச் செய்திகள் வெளிவந்தன.

இவர் வவுனியா புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரிகளுடனும், அரசாங்க அதிபருடனும் வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்தி சம்பந்தமான விடயங்கள் பற்றிப் பேசுவார் எனத் தெரியவருகின்றது.


ஈழநாதத்தின் அளப்பரிய சேவைக்கு

எமது

பாராட்டுக்கள்


# லெஸ்டர் ஜேம்ஸ்பீரீஸ்க்கு கொழும்பில் பாராட்டுவிழா

(கொழும்பு)

இலங்கையில் சினிமாத்துறை வளர்ச்சிக்கு பெரும்பணியாற்றியுள்ள திரைப்பட இயக்குனர் லெஸ்டர் ஜேம்ஸ்பீரிஸ் அவர்களின் 71வயது நிறைவை ஒட்டியும், அவரது 35 வருட சினிமாப்பணியை பாராட்டியும் கௌரவம் வழங்கும் வைபவம் இம்மாத இறுதியில் கொழும்பில் நடைபெற உள்ளது

மேற்படி பாராட்டு வைபவத்தை யொட்டி கொழும்பு நீகல் படமாளிகையில் லெஸ்டரின் ஆறு திரைப்படங்கள் திரையிடப்படும். இதன்பொருட்டு சினிமாத்துறை பற்றிய கருத்துரங்கு ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விழாப்பற்றி தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் திரு டி. எம். சங்கதாஸ கருத்து தெரிவிக்கையில் ''தேசிய சினிமாவளர்ச்சிக்கு அருந் தொண்டாற்றியுள்ள உலக புகழ்பெற்றதிரைப்பட நெறியாளரான லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்களை சிறந்த முறையில் கௌரவிக்க ஏற்பாடுகள் செய்துள்ளோம்.

இந்த பாராட்டு வைபவத்தை ஒட்டிய மலர்ஒன்று வெளியிடப்படுவதுடன், அவரது திரைப்படங்களின் ஸ்டில்புகைப்பட கண்காட்சி ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது'' என்றார் (27)

# தொண்டர் ஆசிரியர்களின் இந்த நிலை மாறுமோ?

(கரவெட்டி)

தற்சமயம் கல்வியமைச்சினால் விண்ணப்பம்கோரப்பட்டுள்ள தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் திட்டத்திற்கு க.பொ.த. (சா/தர) தகமைகளைக் கொண்ட தொண்டர் ஆசிரியர்கள் விண்ணப்பிக்கமுடியாத இக்கட்டான நிலை தோன்றியுள்ளதாகக் தெரிவிக்கப்படுகிறது.

கல்விஅமைச்சினால் கோரப்பட்டுள்ள இத் தொண்டர்ஆசிரியர் நியமனத் திட்டத்திற்கு க.பொ.த. (சா/தர) தகமைகளுடன் விசேட தகமைகளைக் கொண்ட தொண்டர்ஆசிரியர்களும்விண்ணப்பிக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால்க.பொ.த.(சா/தா) தகமைகளுடன் கல்வி கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கு க.பொ.த.(உ/த) தகமைகள்இல்லாததனால் கல்வித்திணைக்களம் அங்கீகாரம் வழங்காத போதிலும்மேற்படி தொண்டர் ஆசிரியர்கள் சேவை நோக்கு அடிப்படையில் சேவகஞ்செய்து, வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பாடசாலை அதிபர்களினாலும்பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினாலும் நியமிக்கப்பட்ட மேற்படி தொண்டர் ஆசிரியர்களின் சேவையினை கல்வித்திணைக்களம் உறுதிப்படுத்திஇவர்களின் சேவை தொடர ஆவன செய்ய வேண்டும். (18)

# தலைமைக் காரியாலயம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று கோண்டாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்டத் தலைமைக் காரியாலயம் காலை 9மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. இவ்வைபவத்தில் விடுதலைப் புலிகளின் மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசாவும், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் கலந்துகொள்வாரெனத் தெரியவருகின்றது.


## குழாய்க் கிணறுகள்
## TUBE WELLS

நவீன பாரிய இயந்திரங்களின் மூலம் குழாய்க்கிணறுகள், ஆழ் குழாய்க்கிணறுகள்


# நாலாயிரம் ரூபா வழங்குமா?

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய், உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சுதுமலை, நவாலி, மானிப்பாய், பண்டத்தரிப்பு, மாதகல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த எண்ணூற்றி இருபத்தெட்டுப் பேருக்குநாலாயிரம்ரூபா வழங்குவது பற்றிய பட்டியல்கள் மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் மானிப்பாய் இலங்கை வங்கியே இதனை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிவாரணப் பணம் எப்போது கிடைக்கும் என குறிப்பிட்ட மக்கள் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அலைந்து திரிகின்றனர்.

இது குறித்து உதவி அரசாங்க அதிபரிடம் விசாரித்த போது அவர் சகல விபரங்களும் மானிப்பாய் இலங்கை வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கூறினார்.

# தொழிலாளர் காங்கிரஸ் பொன் விழா

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொன் விழா மலையக மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியையும், மாற்றத்தையும் ஏற்படுத்தும் தேசிய நீரோட்டத்தில் அவர்களும் பங்குபற்றுவார்கள். அதற்குரிய நடவடிக்கைகளை காங்கிரஸ் எடுத்து வருகின்றது.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், போக்குவரத்து இராஜாங்க அமைச்சருமான திரு எம். எஸ். செல்லச்சாமி, மார்ச்மாதம் 24ஆம் 25ஆம்திகதிகளில் நடைபெற விருக்கும் பொன்விழாவை முன்னிட்டு பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்தார்.

மேலும், அவர் தெரிவிக்கையில் இந்த இ.தொ.கா.வின் பொன் விழா மகாநாடு ஒரு திருப்பு முனையாக அமையும். மலையல மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் காங்கிரஸ் முன்னின்று போராடியுள்ளது.

இன்று மலையகத்தில் உள்ள மிக பெரிய தொழிற்சங்கம் இ. தொ. காவும் எம்மீது தொழிலாளர்கள்கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு நாம் என்றும் நன்றி தெரிவிக்ககடமைப்


## யாழ் நகரில் இன்றைய சினிமா

81 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
நாயகன்
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
பூ- பூவா பூத்திருக்கு
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
அவள் ஒரு தொடர்கதை

வின்சர் - யாழ்
10.30 2.30 6.30
மோகன் - சுகாஷினி
நெஞ்சத்தைக்

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள் செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-270)

**வாடகைக்கு**

வீடியோ பிரதிகள் வாடகைக்கு விடப்படும். ஹப்பி வீடியோ சென்ரர், 613, பீச் றோட், குருநகர். (B- 335)

## வீதி புனரமைப்பு

(ஈச்சமோட்டை)

யாழ். மாநகரசபை பகுதியில் உள்ள பாசையூர் புனித. அந்தோனியார் ஆலயத்தின் முன்னால் செல்லும் வீதி புனரமைக்கப்பட்டு வருகிறது. புங்கங்குளம் வீதி ஏற்கனவே திருத்தம் செய்யப்பட்டு விட்டது. கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியும் புனரமைக்கப்பட்டு வருகிறது. வீதி திருத்தத்தினால் போக்குவரத்தும் இலகுவாகி வருவது குறிப்பிடத்தக்கது. (43)

## வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் நூல் நிலையத்திற்கு சமூக, பொருளாதார, அரசியல் நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் கழக நிர்வாகத்துடன் நேரிலோ அல்லது தபாலிலோ தொடர்புகொள்ளுமாறு மறுமலர்ச்சிக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## அறுவடை பாதிப்பு

பூநகரியில் அண்மையில் பெய்த பெருமழை காரணமாக நெல்லின் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. மழை பெய்த காரணத்தால் வயல்களில் இன்னமும் வெள்ளம் வற்றவில்லை. இதனால் சில கமக்காரர் வயல்களில் வெள்ளத்தையும் பொருட்படுத்தாது அறுவடை செய்கின்றனர். செல்லையாதீவு, செட்டியக்குறிச்சி, நல்லூர் ஆகிய பகுதிகளில் கூடுதலான மழை பெய்துள்ளது. இதனால் சில கமக்காரருக்குநெல் அறுவடையில் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. அறுவடை செய்வதற்கு போதிய கூலி ஆட்களும் கிடையாது. இதனால் கமக்காரர் மிகவும் அவதிப்படுகின்றனர். (43)

புதிய போக்குவரத்து ஒழுங்கு விதிகளைச் செயற்படுத்தப் பன்னிரெண்டு ஊழியர்கள் இடப்படுவர்.

இவர்களுக்கு மக்கள் தமது ஆதரவைத் தந்து அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என மாநகரசபை ஆணையாளர் வேண்டிக்கொள்கிறார்.

வருவதாகச் செய்திகள் வெளிவந்தன.

இவர் வவுனியா புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரிகளுடனும், அரசாங்க அதிபருடனும் வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்தி சம்பந்தமான விடயங்கள் பற்றிப் பேசுவார் எனத் தெரியவருகின்றது.

இன்று கோண்டாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்டத் தலைமைக் காரியாலயம் காலை 9மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. இவ்வைபவத்தில் விடுதலைப் புலிகளின் மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசாவும், விடுதலை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் கலந்துகொள்வாரெனத் தெரியவருகின்றது.

யில் சேவகஞ்செய்து, வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பாடசாலை அதிபர்களினாலும்பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினாலும் நியமிக்கப்பட்ட மேற்படி தொண்டர் ஆசிரியர்களின் சேவையினை கல்வித்திணைக்களம் உறுதிப்படுத்திஇவர்களின் சேவை தொடர ஆவன செய்ய வேண்டும். (18)

லாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், போக்குவரத்து இராஜாங்க அமைச்சருமான திரு எம். எஸ். செல்லச்சாமி, மார்ச்மாதம் 24ஆம் 25ஆம்திகதிகளில் நடைபெறவிருக்கும் பொன்விழாவை முன்னிட்டு பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்தார்.

மேலும், அவர் தெரிவிக்கையில் இந்த இ.தொ.கா.வின் பொன்விழா மகாநாடு ஒரு திருப்பு முனையாக அமையும். மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் காங்கிரஸ் முன்னின்று போராடியுள்ளது.

இன்று மலையகத்தில் உள்ள மிக பெரிய தொழிற்சங்கம் இ. தொ. காவாகும் எம்மீது தொழிலாளர்கள்கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு நாம் என்றும் நன்றி தெரிவிக்ககடமைப்பட்டுள்ளோம்.

பொன்விழாமகாநாட்டிற்கு ஜனாதிபதி பிரேமதாசாகௌரவ அதிதியாக கலந்துகொண்டு மலையக மக்களுக்கு நம்பிக்கைதரும் வகையில் கருத்துரைகள் வழங்குவார் என நம்பலாம். அதனால் இந்த மகாநாடு மிக முக்கியமானதாகும் என்றார். (27

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
அவள் ஒரு தொடர்கதை

வின்சர் - யாழ்
10.30 2.30 6.30
மோகன் - சுகாஷினி
நெஞ்சத்தைக் கிள்ளாதே

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ஈழநாதத்தின் அளப்பரிய சேவைக்கு
எமது
பாராட்டுக்கள்

ஈ-சன்ஸ்

டயறம்ஸ் பில்டிங்ஸ்
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

B/334

குழாய்க் கிணறுகள்
TUBE WELLS

நவீன பாரிய இயந்திரங்களின் மூலம்
குழாய்க்கிணறுகள், ஆழ் குழாய்க்கிணறுகள்
அமைத்துக் கொடுக்கப்படும்.
நீர்வள ஆலோசனைகள் மற்றும்
குழாய்க்கிணறுகள் அமைப்பதற்கு
எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்

ரியூப்வெல்
எஞ்சினியேர்ஸ்

648 1/2 ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
முன்பாக மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

208, ஸ்ரேசன் வீதி,
வவுனியா.

B/135

ஈழ மண்ணில் ஒரு ஈழநாதம்!
ஈழ மக்களின் உரிமைக் குரல் ஈழநாதம்!!
நற்செய்திகளைத் தருவது ஈழநாதம்!!!
கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்புஇருப்பதுபோல்
உனக்கும் நீ செல்லும் இடமெல்லாம்
உன் சிறப்பு ஓங்க வாழ்த்துகின்றோம்!
வாழ்க உன் சேவை! வளர்க உன் ஏடு!!

யாழ் உலோகத் தொழிற்சாலை
அச்சுவேலி.

யாழ் உலோகத் தொழிற்சாலை
கைத்தொழிற்பேட்டை வீதி,
அச்சுவேலி.

யாழ் உலோகத் தொழிற்சாலை
இல: 250, 252, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

B.336

## 14வது பிறந்த நாள் வாழ்த்து

★ ★ ★



★ ★ ★

### செல்வன் இ. ஜெயசுதன்

பூநகரி நல்லூரைச் சேர்ந்த தருமு, தங்கம் தம்பதிகளின் புதல்வன் ஜெயசுதன் 21 3 90 இன்று தனது 14 வது பிறந்த தினத்தை சாவகச்சேரியில் இருக்கும் பெரியம்மா வீட்டில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அக்கா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மாமார், சித்தப்பாமார் சித்திமார், மாமன்மார், மாமிமார், ராஜாமாமா, மாமி (ஜேர்மன்), சித்தப்பா (சுவிஸ்), சின்ராசுச் சித்தப்பா (ஜேர்மன்), உற்றார், உறவினர் ஆகியோர் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

B/298

# ஜேர்மனி இணைப்புக்குப் பேச்சு நடத்த கிழக்கு ஜேர்மன் புதிய அரசுக்கு நிர்ப்பந்தம்

(பேளின்)

கிழக்கு ஜேர்மனியில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் கிறிஸ்தவ ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்றது. ஆனாலும் கூட்டணி அரசு அமைப்பது குறித்து சிறிய கட்சிகளுடன் பேசி வருகிறது. இரண்டு ஜனநாயக கட்சிகள் ஒன்றுபட என்னென்ன தேவ என்பதை கூட்டணித் தலைவர் விளக்கினார். மேலும் அவர் குறிப்பிடுகையில் ஜனநாயக யூனியன் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும், அது ஆனி மாத இறுதிக்குள் ஏற்படும் என்றும் தெரிவித்தார். அதே வேளை 400 இடங்களை கொண்ட பாராளுமன்றத்தில் கிறிஸ்தவ ஜனநாயக கூட்டணிக்கு பெரும்பான்மை பலம் கிடைக்காததால், கூட்டணி அரசு பேச்சு வார்த்தையை துவக்கியிருக்கிறது. மேலும் லிபரல் கட்சியுடன் சேர்ந்து அரசு அமைக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது. இதற்கிடையில் கிறிஸ்தவ ஜனநாயக கூட்டணியுடன் சேர முடியாது என சமூக ஜனநாயக கட்சி அறிவித்திருக்கிறது. கம்யூனிஸ்டுகளுடனோ கிறிஸ்தவ ஜனநாயக கூட்டணியைச் சேர்ந்த ஜேர்மன் சோசலிசக் கட்சியுடனோ சேரமாட்டோம் என்றும் அக்கட்சி குறிப்பிட்டது.

இரு ஜேர்மனியும் ஒருங்கிணைந்து ஒரே ஜேர்மனியாக வரவேண்டும் என்ற விடயத்தின் தொடர்பாக, மேற்கு ஜேர்மனியோடு விவாதிக்க வேண்டிய முக்கிய கடமை இப்போது கிழக்கு ஜேர்மன் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சித் தலைவர்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. இது சம்பந்தமான பேச்சு வார்த்தை நேற்றுக்காலையில் கிறிஸ்தவ ஜனநாயக கட்சியின் காரியாலயத்தில் தொடங்கியது.

தேர்தல் தொடர்பாக, கிழக்கு ஜேர்மனியின் முன்னாள் கம்யூனிஸ்ற் கட்சியின் செய்தித்தாள் பின்வருமாறு கூறுகிறது. "கன்சவேற்றிவ் கட்சிக் கூட்டணிக்கும் மூன்று கட்சி கூட்டணிக்கும் 48% வாக்குகள் கிடைத்தமை மக்கள் இரு ஜேர்மனிகளின் ஐக்கியத்தை விரும்புகிறார்கள் என்பதையே குறிக்கிறது. கிழக்கு ஜேர்மனியில் சோசலிசம் தோல்வி அடைகிறது. எனவும் இப்பத்திரிகை குறிப்பிட்டது. இத்தேர்தல் தொடர்பாக கண்காணிப்புச் செய்த ஐரோப்பிய பார்வையாளர் குழு சுதந்திரமாகவும், ஒழுங்கான முறையிலும், முறைகேடுகள் இன்றியும் நடைபெற்றன என்று கூறுகின்றது.

அதேவேளைசோவியத் யூனியன் இரு ஜேர்மனிகளின் இணைப்பை வரவேற்கும் அதேவேளை ஒன்றுபட்ட ஜேர்மனி நேட்டோ அமைப்பில் இருக்கக்கூடாது என்றும் கூறியது. இரண்டு ஜேர்மனியையும் இணைப்பது சம்பந்தமான நடவடிக்கைகளை நிதானமாக செய்ய வேண்டும் என்றும் சோவியத் யூனியனின் வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் வலியுறுத்தினார்.

## முதலைப் பண்ணைக்குள் பாய்ந்து பெண் தற்கொலை

(பாங்கொக்)

இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க இளம் பெண் ஒருவர் முதலைப் பண்ணையில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். நூற்றுக்கதிகமான முதலைகள் அவரைக் கடித்துக் குதறியதாம். இச் சம்பவம் சென்ற ஞாயிறன்று, பாங்கொக்கில் உல்லாசப் பயணிகள் முன்னிலையில் நடைபெற்றதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பயத்தினால் உல்லாசப் பயணிகள் அலறியுள்ளனர். உல்லாசப் பயணிகளின் பொழுது போக்கு இடமான இப் பண்ணையில் கடமையிலிருந்த ஊழியர்கள், அவரை மீட்க அரைமணிநேரம் முதலைகளுடன் போராடினார்களாம் முதலை ஒன்றின் வாயிலிருந்து பெண்ணை மீட்டசமயம், அவர் இறந்திருக்கக் காணப்பட்டார். "நான் சாகப்போகிறேன்" என்று கத்தியபடி முதலைப் பண்ணைக்குள் பாய முயற்சித்த இப் பெண்ணை, முதலில் உல்லாசப் பயணிகள் தடுத்து நிறுத்திப் புத்திமதி கூறியுள்ளார்கள். உல்லாசப் பயணிகள் அவ்விடத்தை விட்டு அகன்று சுமார் 15 நிமிடங்கள் ஆகியதும், இப் பெண் பண்ணைக்குள் பாய்ந்து தனது உயிரை மாய்த்துக்கொண்டார்.

முதலைப் பண்ணையில் 40 வருடகாலத்தில், இதுதான் முதற் தற்கொலை என்று பண்ணை முகாமையாளர் தெரிவித்தார். இச் சம்பவத்துக்குப் பிறகு பாதுகாப்பு ஒழுங்குகள் முதலைப் பண்ணையில் பலப்படுத்தப்பட்டு உள்ளன,

## கியூபாவில் மாற்றம் ஏற்படாது

(சஸ்றோ)

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தமது வழியில் சொல்வதை தான் வரவேற்கிறேன். ஆனால் கியூபாவில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்று கியூபா ஜனாதிபதி பிடல் கஸ்றோ, கடந்த வெள்ளியன்று சர்வதேச பத்திரிகையாளருக்குத் தெரிவித்தார்.

## விடுதலைப்புலிகளின் அபிப்பிராய பெட்டிகள்

(சரவெட்டி)

வடமராட்சிப் பகுதிகளில் தற்சமயம் விடுதலைப்புலிகளின் அபிப்பிராயப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

பொது மக்கள் நடமாடும் முக்கிய இடங்களில் வைக்கப்பட்டுள்ள இவ் அபிப்பிராயப் பெட்டிகளில் பொது மக்கள் தமது அபிப்பிராயங்களை தெரிவிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (18)

## விவசாய நிலங்களை சிறந்தமுறையில் பயன்படுத்துக

(பருத்தித்துறை)

விவசாய அபிவிருத்தி மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு யாழ், மாவட்டத்திலுள்ள சகல விவசாயக் காணிகளும் சிறந்த முறையில் பயிர்ச்செய்கைக்குட்படுத்தப்பட வேண்டும் என்றும் திறமையாக முகாமை செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் யாழ். மாவட்ட கமநலச் சேவை உதவி ஆணையாளர் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பெரும்பாக உத்தியோகத்தர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இந் நடவடிக்கைகள்பற்றி காணிச் சொந்தக்காரர்களுக்கும் இருப்பாட்சியாளர்களுக்கும் அறிவிக்க வேண்டும் எனவும் கமநலச்சேவை உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். விவசாயக் காணிகள் யாவும் சிறந்த முறையில் பயிர் செய்யப்படுகின்றனவா என்பதைப் பார்வையிட வேண்டியதோடு பின்னர் திறமையாகப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளாத கமக்காரர்களிடமிருந்து விளக்கத்தினைக் கேட்கவேண்டியதோடு தரப்பட்ட விளக்கம் திருப்திகரமாக இல்லாது விட்டால் கிராமசேவகர்கள் மூலம் மேற்பார்வைக் கட்டளை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

## பருத்தித்துறைபொலிஸ் நிலையம் வேறு இடத்துக்கு மாற்றப்படும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தபால் நிலையத்தில் தற்போது இயங்கிவரும் பருத்தித்துறை பொலிஸ் நிலையம் வெகு விரைவில் இடம்மாறவுள்ளது. பொலிஸ் நிலையம் இடம் மாறியதும் தற்போது பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு முன்னால் உள்ள தனியார் கட்டிடமொன்றில் இயங்கிவரும் பருத்தித்துறை தபால் நிலையம் தபால் நிலையச் சொந்தக் கட்டிடத்திற்கு இடம்மாற்றம் செய்யப்படும்.

பருத்தித்துறை தபால் நிலையக்கட்டிடத்தில் இயங்கிவரும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தை இடம் மாற்றும்படி பருத்தித்துறை பிரஜைகள் குழு ஏற்கனவே பொலிஸ் மா அதிபரைக் கேட்டிருந்தது.

தபால் தந்தி அமைச்சும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைப் பருத்தித்துறை தபால் நிலையக் கட்டிடத்திலிருந்து இடம்மாற்றி தபால் நிலையத்தை தபால் நிலையக்கட்டிடத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளது. (25)

## மகஜர் கையளிப்பு

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதியில் உள்ள நீர் பைப்புகள் பழுதடைந்த நிலையில் இருப்பதும் குறைந்தது 4 வருடங்களாக நீர் பைப்புகளில் நீர் வராததை இட்டு சுவாமியார் வீதி மக்கள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றை யாழ். மாநகரசபை ஆணையாளரின் கையில் ஒப்படைத்துள்ளனர். மகஜரை பெற்றுக் கொண்ட ஆணையாளர் புதிய பைப்புகள் போட்டு தண்ணீர் வருவதற்கான நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். (43)

## மன்னார் மாவட்டத்தில் நிறுவைகளுக்கு முத்திரையிடல்

(கொழும்புத்துறை மார்ச் 19)

மன்னார் மாவட்டத்தில் 21 22, 23 ஆம் திகதிகளில் மூன்று தினங்கள் உயிலங்குளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும், 27, 28, 29 ஆம் திகதிகளில் முருங்கன் பலநோக்குக் கூட்டுறவச் சங்கத்திலும் அவ்வப்பகுதி வியாபாரிகளின் அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடப்படும் என்று மன்னார் மாவட்ட நிறுவைகள், அளவைகள் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

உயிலங்குளம், முருங்கன் பகுதிகளிலுள்ள அரிசி ஆலைகளிலும், நெல் உழுந்து போன்ற உபஉணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்படும் மேடைத் தராசுகள், வில் தராசுகள் எடைகுறைவாக இருப்பதாகப் பொது மக்கள் பலர் புகார் செய்துள்ளதாகவும் அவர் ... வோர்மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (24)

## நிவாரணம் வழங்கப்படும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியில் எதிர்வரும சனி, ஞாயிறு (24-03-90, 25-03-90) இருநாட்களில் நான்கு கிராம சேவை அலுவலர்பிரிவுகளைச் சேர்ந்த 2100 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

சனிக்கிழமை அல்வாய்மேற்கைச் சேர்ந்த 847 குடும்பங்களுக்கும், துன்னாலை வடக்கைச்சேர்ந்த 401 குடும்பங்களுக்கும் இரண்டாங்கட்ட 1000 ரூபா மீளக்குடியமர்த்தல்நிவாரணமும், ஏற்கனவே நிவாரணப் பெறும்பட்டியலில் இடம் பெற்றும் அந்நிவாரணத்தைப் பெறத்தவறிய அல்வாய் மேற்கைச் சேர்ந்த ... மும் வழங்கப்படவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை புலோலி மேற்கைச் சேர்ந்த 927 குடும்பங்களுக்கும் அம்பனையைச் சேர்ந்த 265 குடும்பங்களுக்கும் இரண்டாங்கட்ட 1000 ரூபா நிவாரணம்வழங்கப்படும் ஏற்கனவே நிவாரணம்பெறும் பட்டியலில் இடம் பெற்றும் அந்நிவாரணத்தைப் பெறத் தவறிய புலோலி மேற்கைச் சேர்ந்த 14 குடும்பங்களுக்கு 2000 ரூபா நிவாரணமும் வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்கியில் இந்நிவாரணப் பணத்தைப் பெற்றுக்கொள்ள வருபவர்கள் அடையாள அட்டை, அறிமுக அட்டை,

## இந்திய கிரிக்கெட் அணி மீண்டும் ஒரு சக்தியாக......

இந்திய கிரிக்கெட் அணியில் திடீர் திடீரென ஏற்படும் மாற்றங்கள் ஆச்சரியத்துக்குரியனவல்ல. குறிப்பாக ... யொன்றை வளர்த்தெடுக்க வேண்டிய அவசியம் பற்றியும், அதனாலேயே நியூசிலந்து சுற்றுப் பயணத்தின் போது புதியவர்கள் பலர் ... சிலந்துக்கு அனுப்பியமையும் தெரிவில் சீரான கொள்கையின்மையைக் காட்டுகிறது.

மனோஜ் பிரபாகர் சிறந்ததொரு வேகப் பந்துவீச்சாளராக வளர்ந்து வருகையில் அவருக்கு நியூசிலந்தில் இரட்டைச் சுமை சுமத்தப்பட்டுள்ளது. அவரே பல ஆட்டங்களில் ஆரம்பத் துடுப்பாட் ... திடீரென்று இந்திய அணியின் தலைவராக்கப்பட்டுள்ளார். தற்போது நியூசிலந்தில் சிறப்பாகச் செய்யாத இந்திய அணியின் தலைவர் தன் தலைமைப் பதவியைக் காப்பாற்றிக் கொள்வாரா? ஏப்ரலில் நடைபெறவிருக்கும் சார்ஜா கப் ஒருநாள் போட்டிகளுக்கும் மேமாதமளவில் இடம் ...

கள் தமது வழியில் சொல்வதை தான் வரவேற்கிறேன். ஆனால் கியூபாவில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்று கியூபா ஜனாதிபதி பிடல் கஸ்றோ, கடந்த வெள்ளியன்று சர்வதேச பத்திரிகையாளருக்குத் தெரிவித்தார்.

போக்கு இடமான இப் பண்ணையில் கடமையிலிருந்த ஊழியர்கள், அவரை மீட்க அரைமணிநேரம் முதலைகளுடன்போராடினார்களாம். முதலை ஒன்றின் வாயிலிருந்து பெண்ணை மீட்டசம

பண்ணை முகாமையாளர் தெரிவித்தார். இச் சம்பவத்துக்குப் பிறகு பாதுகாப்பு ஒழுங்குகள் முதலைப் பண்ணையில் பலப்படுத்தப்பட்டு உள்ளன,

பொது மக்கள் நடமாடும் முக்கிய இடங்களில் வைக்கப்பட்டுள்ள இவ் அபிப்பிராயப் பெட்டிகளில் பொது மக்கள் தமது அபிப்பிராயங்களை தெரிவிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (18)

மூன்று தினங்கள் உயிலங்குளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும், 27, 28, 29 ஆம் திகதிகளில் முருங்கன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் அவ்வப்பகுதி வியாபாரிகளின் அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடப்படும் என்று மன்னார் மாவட்ட நிறுவைகள், அளவைகள் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

உயிலங்குளம், முருங்கன் பகுதிகளிலுள்ள அரிசி ஆலைகளிலும், நெல் உழுந்து போன்ற உபஉணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்படும் மேடைத் தராசுகள், வில் தராசுகள் எடைகுறைவாக இருப்பதாகப் பொது மக்கள் பலர் புகார் செய்துள்ளதாகவும் அவர் எமது நிருபருக்கு அறிவித்துள்ளார். எனவே வியாபாரிகள் அனைவரும் சகல தராசுகளுக்கும் தவறாது முத்திரையிடப்பட வேண்டும் என்றும், தவறு

# இந்திய கிரிக்கெட் அணி மீண்டும் ஒரு சக்தியாக......

இந்திய கிரிக்கெட் அணியில் திடீர் திடீரென ஏற்படும் மாற்றங்கள் ஆச்சரியத்துக்குரியனவல்ல. குறிப்பாக தலைமைப் பதவி தொடர்பாக அனேக மாற்றங்களுக்கு இந்திய அணியுள்ளாகியுள்ளது. கடந்த வருடம் வெங்சார்கர் தலைமையில் மே இந்திய சுற்றுப்பயணம் செய்த இந்திய அணி தோல்வி கண்டபோது, அவரது தலைமை நீடிக்காதென்பது தெரிந்தது. அதேபோல் நேரு கோப்பை ஒருநாள் ஆட்டங்களுக்கும் தொடர்ந்து வந்த பாகிஸ்தான் சுற்றுப் பயணத்துக்கும் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீ காந்த் காப்டனாகத் தெரிவு செய்யபட்டார். ஸ்ரீ காந்தின் தலைமையில், நேருக்கிண்ணம் ஒருநாள் சர்வதேசப் மோட்டிகளில் அரை இறுதி ஆட்டம் வரை வந்த இந்திய அணி இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற இயலவில்லை. பின்னர் பாகிஸ்தானில் இவ்வணியினர் தோல்விகளைச் சந்தித்தனர். இதனைத் தொடர்ந்து நியூசீலாந்துக்கான சுற்றுப்பயண ஆயத்தங்கள் தொடர்ந்தன. அப்போது கிரிக்கெட் ஆர்வலர்களுக்கு சில அதிர்ச்சிகள் காத்திருந்தன. இந்திய அணி அறிவிக்கப்பட்ட போது பல முன்னணி வீரர்கள் அணியில் இருந்து நீக்கப்பட்டிருந்தனர். அணித்தலைவர் சிறிகாந்த் உட்பட வெங்சார்கர் ராமன் லம்பா, ரவி சாஸ்திரி மணிந்தர் சிங், அர்ஸாத் அயூப் ஆகியோரே நீக்கப்பட்டவர்கள். இவர்கட்குப் பதிலாக வெங்கடபதிராஜு, அட்டுல் வாசன், ஹிர்வானி, சந்திரசேகர், குர்ஸரன்சிங் ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மொகமட் அஸாருதீன் அணித் தலைவராக்கப்பட்டார். இவ்வணியினர் நியூசீலந்தில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் தோல்வி கண்டனர். அதேபோல் அவுஸ்திரேலியா உள்ளிட்ட ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களிலும் தோல்வி கண்டனர்.

இந்தியத் தெரிவாளர்கள், இளமை நிரம்பிய அணியொன்றை வளர்த்தெடுக்க வேண்டிய அவசியம் பற்றியும், அதனாலேயே நியூசீலந்து சுற்றுப் பயணத்தின் போது புதியவர்கள் பலர் சேர்க்கப்பட்டார்கள் என்றும் கூறினர். இது விஷப் பரீட்சையாக முடிவடைந்ததை தற்போது காணமுடிகிறது. றிச்சர்ட் ஹட்லி இடம் பெறும் அணியுடன் இப்படியான பரீட்சார்த்தங்களைச் செய்யலாமா என்பது கேள்விக்குரியது. அடுத்த ஜோண் ரைட் மாட்டின்குறோ, கிரேட் பட்ச், அன்ட்ரூ ஜோண்ஸ் போன்ற ஆட்டக்காரர்களைக் கொண்ட நியூசீலந்து அணியை இரண்டாம் தர அணியாக எண்ணியா பல புதுமுகங்கள் ஒரேடியாக அறிமுகப்படுத்தினார்கள் என்றும் வினாவுக்குரியது.

சுற்றுப்பயண ஆரம்பத்திலேயே சித்து காயமடைந்த போது அவரது இடத்துக்கு இந்தியாவில் இருந்து வெங்சார்கர் அழைக்கப்பட்டார். இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் கொடுப்பதாக இருந்தால் அணியில் இருந்து சந்திரசேகர் அல்லது குர்ஷரண்சிங் அந்த இடத்தை நிரப்பியிருக்க வேண்டும். அதை விடுத்து வெங்சார்கர் அழைக்கப்பட்டது ஏன்? அப்படி இந்தியாவில் இருந்து ஒருவரைப் பெறுவதாயின் அது கிருஷ்ணமாச்சாரி சிறிகாந்தாகத்தான் இருந்திருக்க வேண்டும். அவர் சிறந்த அனுபவம் பெற்ற ஆரம்பத்துடுப்பாட்ட வீரர். மேலும் மிடில் ஓடர் பலமிழந்திருப்பதாலேயே வெங்சார்கர் அழைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அண்மைக்கால சுற்றுப்பயணத்தொடர்களில் இந்திய மிடில் ஓடர் பலமிழந்ததென்பது நன்கு தெரிந்தவிடயம். இதனை சுற்றுப் பயணத்தின் இடையிலா தெளிவானர்கள் புரிந்து கொண்டார்கள்? அணித்தெரிவின் போது வெங்சார்கர் தெரிவு செய்யப்படாமைக்கன கா சரிவரக்கூறமுடியாமற்றபோனமையும், பின்னர் அவரையே நியூசீலந்துக்கு அனுப்பியமையும் தெரிவில் சீரான தன்மையின்மையைக் காட்டுகிறது.

மனோஜ் பிரபாகர் சிறந்ததொரு வேகப் பந்துவீச்சாளராக வளர்ந்து வருகையில் அவருக்கு நியூசிலந்தில் இரட்டைச் சுமை சுமத்தப்பட்டுள்ளது. அவரே பல ஆட்டங்களில் ஆரம்பத் துடுப்பாட்டக்காரராக ஆடிக் கொண்டிருக்கிறார். ஒருநாள் ஆட்டத்தில் சிலவேளை இது சாத்தியமாகலாம். ஆனால் டெஸ்ட் ஆட்டங்களில் பொருத்தமான நடைமுறையாக அமையாது. அவரது பந்துவீசும் திறமையையும் எங்கே இது பாதித்துவிடுமோ என்று ரசிகர்கள் கவலைப்படுகிறார்கள். கபில் தேவின் பின் இந்தியப் பந்துவீச்சாளர்களில் தலைமைப் பந்துவீச்சாளராகத் திகழப் போவது மனோஜ் பிரபாகர் என்பதில் சந்தேகமில்லை. அவரை வேகப் பந்துவீச்சாளராகவே வளர்த்தெடுக்க வேண்டிய அவசியம் இந்தியாவிற்கு உண்டு. தற்போதைய பந்துவீச்சாளர்கள் ஒருஅணியை இருமுறை ஆல் அவுட் ஆக்குவதில் வல்லவர் அல்ல என்ற கருத்து நிலவும்போது உள்ளவரின் திறமைக்குப் பங்கம் ஏற்பட்டுவிடக் கூடாது.

ஆரம்பத்தில் ரவிசாஸ்திரி இந்திய அணியின் தலைவராக வளர்த்தெடுக்கப்படுகிறார் எனப்பட்டது. தற்போது அவர் அணியிலேயே இல்லை. அதேபோல குறுகிய கால இடைவெளியில் வெங்சார்கரும், ஸ்ரீகாந்தும் அணித் தலைமையை இழந்து விட்டார்கள். ஸ்ரீகாந்த் நேரு கப் சர்வதேச ஒருநாள் போட்டிகளுக்கும், பாகிஸ்தான் டெஸ்ட் தொடருக்கு மட்டுமே தலைவராக இருந்துள்ளார். எனவே ஒரு டெஸ்ட் தொடரில் மட்டும் தலைமை தாங்கிய ஸ்ரீகாந்துக்கு நியூசீலந்து சுற்றுப்பயணத்திற்கான இன்னொரு சந்தர்ப்பத்தையும் வழங்கிப் பார்த்திருக்கலாம். எது எவ்வாறாயினும் பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தின் போது, தன் இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள சிறப்பாக ஆடவேண்டிய அழுத்தத்தில் இருந்த மொகமட் அஸாருதீன் (பாகிஸ்தானில் அவர் சிறப்பாக ஆடினார்) திடீரென்று இந்திய அணியின் தலைவராக்கப்பட்டுள்ளார். தற்போது நியூசிலந்தில் சிறப்பாகச் செய்யாத இந்திய அணியின் தலைவர் தன் தலைமைப் பதவியைக் காப்பாற்றிக் கொள்வாரா? ஏப்ரலில் நடைபெறவிருக்கும் சார்ஜாகப் ஒருநாள் போட்டிகளுக்கும் மேமாதமளவில் இடம் பெறவிருக்கும் இங்கிலாந்துக்கான சுற்றுப் பயணத்துக்கும் அஸாருதீனே தலைமை தாங்குவார் என தேடி அவர்கள் அறிவித்திருப்பது நம்பிக்கையைத் தருகின்றது.

அணிகளில் சீனியர் பிளேயர்ஸ் லவேளைகளில் தெரிவுக் குழுவினருடன் இணைந்து போவது குறைவாக இருக்கலாம். அந்தக் காரணத்துக்காக இந்திய அணியில் பலர் நீக்கப்பட்டிருப்பார்கள் என்ற சந்தேகம் ஆதாரமற்றதாக இருக்க வேண்டும் என்பது ரசிகர்களின் விருப்பமாகும். மேலும் புதியவர்களைச் சேர்த்துவிட்டு, அவர் ஓரிரு ஆட்டங்களில் சோபிக்கவில்லையென்றதும், அவர்களைக் கைவிடுவதும் அவ்வளவு பொருத்தமல்ல. ஒரே முறையில் பல புதியவர்களை அறிமுகப்படுத்தாமல் ஒருவர் இருவராக அணியில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். மேற்கிந்திய, பாகிஸ்தானிய அணிகளில் இவ்விதமே மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் இவை இரண்டும் இன்றும்கூட கிரிக்கெட் உலகின் பெருஞ்சக்திகளாக விளங்கி வருகின்றன.

இந்தியா டெஸ்ட் போட்டிகளில் வெற்றிகண்டு நீண்ட நாட்களாகி விட்டன. ஒருநாள் போட்டிகளிலும் தன்னை நிரூபிக்க வேண்டிய நிலையில் இந்திய அணி உள்ளது. தோல்விகளைச் சந்தித்தாலும் கூட நீண்ட காலத்தில் திறமையானதொரு அணியை உருவாக்கஇயலும் என்பதற்கு அலன் போடரின் இன்றைய ஆஸ்திரேலிய அணி ஒரு நல்ல முன்னுதாரணமாகும். நீண்ட காலத்திட்டமொன்றின் சாதனையே இன்றைய அவுஸ்திரேலிய அணி.

— நிர்மலன்

## நிவாரணம் வழங்கப்படும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியில் எதிர்வரும சனி, ஞாயிறு (24-03-90, 25-03-90) இரு நாட்களில் நான்கு கிராம சேவை அலுவலர்பிரிவுகளைச் சேர்ந்த 2100 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

சனிக்கிழமை அல்வாய்மேற்கைச் சேர்ந்த 847 குடும்பங்களுக்கும், துன்னாலை வடக்கைச்சேர்ந்த 401 குடும்பங்களுக்கும் இரண்டாங்கட்ட 1000 ரூபா மீளக்குடியமர்த்தல்நிவாரணமும், ஏற்கனவே நிவாரணம் பெறும்பட்டியலில் இடம் பெற்றும் அந்நிவாரணத்தைப் பெறத்தவறிய அல்வாய் மேற்கைச் சேர்ந்த 36 குடும்பங்களுக்கும், துன்னாலை வடக்கைச் சேர்ந்த 11 குடும்பங்களுக்கும் 2000 ரூபா நிவாரணமும் வழங்கப்படவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை புலோலி மேற்கைச் சேர்ந்த 927 குடும்பங்களுக்கும் அம்பலனையைச் சேர்ந்த 265 குடும்பங்களுக்கும் இரண்டாங்கட்ட 1000 ரூபாநிவாரணம்வழங்கப்படும் ஏற்கனவே நிவாரணம்பெறும் பட்டியலில் இடம் பெற்றும் அந்நிவாரணத்தைப் பெறத் தவறிய புலோலி மேற்கைச் சேர்ந்த 14 குடும்பங்களுக்கு 2000 ரூபா நிவாரணமும்வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்கியில் இந்நிவாரணப் பணத்தைப் பெற்றுக்கொள்ள வருபவர்கள் அடையாள அட்டை, அறிமுக அட்டை, குடும்பப்பதிவுஅட்டைகளைத் தவறாது கொண்டுவரும்படி வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது. (25)

கனகபுரம் கூட்டத்தில் கோபி பேச்சு

## ஆறுகோடி தமிழ்மக்களுக்கு சிறந்த படை விடுதலைப் புலிகளே

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒவ்வொரு வீரனும் தனது உயிரைவிடத் தனது மண்ணையே கூடுதலாக நேசித்தான். அதனால் தான் இந்திய ஆக்கிரமிப்புப் படையின் குண்டடிபட்டு குருதி வழிந்தோட குற்றுயிராகக் கிடந்தவனைக் காப்பாற்றச் சென்ற சகபோராளியிடம் "என்னைக் காப்பாற்ற நினைக்காதே, எதிரியை நோக்கிச் சுடு'? என்று கூறிவிட்டு சையனைட் குப்பியைக் கடித்து மரணத்தைத் தழுவிக் கொண்டான் வாதவூரன்.

கனகபுரம் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற கப்டன் வாதவூரனின் இரண்டாவது ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கோபி மேற்கண்டவாறு கூறினார்.

கனகபுரம் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் திரு. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் வாதவூரனின் தந்தை உருவப் படத்திற்கு விளக்கு ஏற்றி அஞ்சலி செய்தார்.

விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கோபி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இந்தியப் படையினர் ஆகாய மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் 14-3-88இல் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அலம்பில் காட்டுப் பகுதியிலும், வயல்வெளியிலும் தமது படையினரைக் கொண்டுவந்து இறக்கினர்.

கப்டன் வாதவூரன் தலைமையிலும், மற்றும் இருவர் தலைமையிலும், விடுதலைப் புலிகளின் படைப்பிரிவு சென்று இந்தியப் படையுடன் உக்கிரமாக மோதியது.

கப்டன் வாதவூரன் தலைமையில் சென்ற படைப்பிரிவு 37 இந்தியப் படையினரைச் சுட்டுக் கொன்றது.

தனது படைப்பிரிவைச் சேர்ந்த போராளி ஒருவன் மீது இந்தியப்படையைச் சேர்ந்த ஒருவன் சுட்டதை அவதானித்த வாதவூரன், அந்த இந்திய சிப்பாயைத் தனது துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டுச் சக போராளியை காப்பாற்றச் சென்றபோதே வாதவூரன் குண்டடிபட்டு விழுந்தான்.

அப்போது அவனைக் காப்பாற்ற வந்த போராளியைப் பார்த்து என்னைக் காப்பாற்றாதே மண்ணைக் காப்பாற்று என்று கூறிவிட்டு, தான் உயிரோடு இருந்தால் தன்னைக் காப்பாற்றும் பணியில் சக போராளிகள் இறங்கி விடுவார்கள், அதனால் போராட்டம் தோற்றுவிடும் என்று எண்ணி சையனை குப்பியைக் கடித்துத் தனது உயிரைத் துறந்தான் வாதவூரான்.

அவனைப் போன்று எத்தனை இளம் போராளிகள், வாழவேண்டிய வயதில், அனுபவிக்கவேண்டிய ஆசாபாசங்களை மறந்து இந்த மண்ணைக் காக்கும் பணியில் ஈடுபட்டு, விலை மதிக்க முடியாத தமது உயிரைப் போக்கிக் கொண்டார்கள்.

இந்த நாட்டில் வாழுகின்ற தமிழ் மக்களில் 15 வீதமான இளைஞர், யுவதிகளே இந்த நாட்டின் விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை மாறி எமது போராட்டம் மக்கள் போராட்டமாக மாற வேண்டும்.

ஆறு கோடி தமிழ் மக்களின் சிறந்த படைப்பிரிவாக தமிழீழ விடுதலைப் புலிகளின் படைப்பிரிவே உள்ளது - என்பதை உலகத் தமிழர்கள் அனைவரும் அறிவர். அத்தகைய படைப்பிரிவைக் கொண்ட இயக்கம் வேறு. மக்கள் வேறு என்று எண்ணாது இது தமிழர் படை, எமது படை என்று எண்ண வேண்டும் என்றார்.

# தமிழ் சிங்களப் புத்தாண்டில் விளையாட்டுப் போட்டிகள்

(விசேட நிருபர்)

இனங்களுக்கு இடையே ஐக்கியத்தை ஏற்படுத்தும் பொருட்டு தமிழ், சிங்கள புத்தாண்டுதினத்தில் விளையாட்டுப் போட்டிகளை நடாத்த யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில்ஒழுங்குகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 28 கிராம சேவையாளர் பகுதிகளிலும் அமைந்துள்ள சனசமூக நிலையப் பிரதிநிதிகளுடன் கடந்த 19ஆம் திகதி காலை 9 மணிக்கு குருநகர் புனிதயாகப்பர் ஆலய மண்டபத்தில் யாழ். உதவிஅரசாங்க அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளை ஆலோசனைக் கூட்டமொன்றை நடத்தினார்.

அதன்படி எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டை ஒட்டி யாழ். உதவி அரசாங்கஅதிபர் பிரிவில் சமய வைபவங்களும், விளையாட்டுப் போட்டிகளும், நாடோடிப் பாடல், கவிதைப் போட்டிகளும் நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது.

விளையாட்டுப் போட்டிகளில் மரதன் ஓட்டமும், இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டப் போட்டிகளும் நடத்துவதென்று முடிவாகி உள்ளது. (12)


சைவ உணவு நீங்கள் சாப்பிட்டுமகிழவும், நீங்கள் பார்சலாக வீட்டுக்கு கொண்டு போய் உண்ணவும் யாழ். நகரில் உங்களுக்குச் சேவை செய்ய காத்திருக்கும்,

வெள்ளி விலாஸ்

இல-- 288

கே. கே. எஸ் வீதி,

யாழ்ப்பாணம்.

(B/307)



ஆதிகாலம் தொட்டு வைத்திய சேவையில் ஈடுபட்டு வரும் வைத்தியர், உழுக்கு, முறிவு, நோவு முதலியவற்றை குணமாக்குவதற்கு கைதேர்ந்த வைத்தியர்.

டாக்டர் டோமினிக்

(சென்.பற்றிக்ஸ் கல்லூரி முன்பாக)

சென். பற்றிக்ஸ் வீதி,

யாழ்ப்பாணம்.

(B/292)



இன்று சுகாதார முறையில் நெல்லியடி கிராமத்தில்


# பொதுக் கூட்டம்

(கோண்டாவில்)

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 25ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறும். இக்கூட்டத்தில் நடப்பு வருடத்திற்கான உத்தியோகத்தர்கள் தெரிவும் நடைபெறும். (34)


இசைப்பிரியர் தமக்கு விருப்பமான கீதங்களுக்கும் மற்றும்

பலவிதமான

பாடல்களையும்

நீங்கள் பதிவு செய்துகொள்வதற்கு

நாடவேண்டிய இடம்!

கிரோ


# பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு

(கொழும்பு)

இந்த வருடம் பல்கலைக் கழகங்களிலிருந்து பட்டப் படிப்பை முடித்து வேளியேறும் பட்டதாரிகளில் 4 000 பேருக்கு தொழில் வாய்ப்பை வழங்க உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. தனியார் துறைகளிலும், அரசாங்கத் திணைக்களங்களிலும் உள்ள வெற்றிடங்கள் பற்றிய தரவுகளைத் திரட்டுவதில் இப்பொழுது உயர் கல்வி அமைச்சு ஈடுபட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

# திறப்பு விழா

(பருத்தித்துறை)

குடத்தனை கரையூர் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் பாடசாலை அபிவிருத்திச் சபையினரால் நிர்மாணிக்கப் பட்டபுதிய பாடசாலைக் கட்டிடத்தை இன்று21ஆம் திகதி வடமராட்சி கோட்டக்கல்வி உதவிப்பணிப்பாளர் திரு.பீ.வீரபத்திரன் திறந்து வைக்கவுள்ளார். பாடசாலைஅதிபர் திரு. ரீ. செபமாலை தலைமையில் நடைபெறவுள்ளஇக்கட்டிடத் திறப்பு விழாவிலே பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு ஆர்.எம்.ஜீ. நேசநாயகம் அடிகளார் நாகர் கோவில் கொத்தணி அதிபர் திரு.எஸ். பரமகுரு ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர். பாடசாலை அபிவிருத்திச்சபைச்செயலாளர் திரு.எஸ்பொடிசிங்கர் நன்றியுரை கூறுவார். இக்கட்டிடத்தை வராத்துப்பளை கட்டிடக் கலைஞர் திரு.கணேசு. கார்த்திகேசு அவர்கள் மிகச் சிறப்பாக நிர்மாணித்து முடித்துள்ளார் (25)

# மெய்வல்லுனர் போட்டி

(வந்தாறுமூலை)

மட்/வந்தாறுமூலை கணேச வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி 15-3-1990 பி. பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி ஆர். முருகுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. மேற்படி விளையாட்டுப் போட்டியில் தாமரை இல்லம் முதலாம் இடத்தையும், மல்லிகை இல்லம் இரண்டாம் இடத்தையும் முல்லை இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. இவ்விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்

# தபால் ஊழியர்களுக்கு ஊக்குவிப்புப்பணம் இல்லை

ஸ்ரீலங்கா அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கென, ஆறுமாத சம்பளத்தில் அரைவாசித் தொகையை ஊக்குவிப்புப் பணமாகக் கொடுப்பதென முடிவு செய்தது. இதை உறுதிப்படுத்தி சுற்றுநிருபம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது. இச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் மேற்படி ஊக்குவிப்புப் பணம் 5-7-89. 31-12-89 காலப் பகுதிக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

இச் சுற்றுநிருபத்திற்கமைய வடக்கு கிழக்கில் உள்ள ஒரு சில திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு மட்டுமே இக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

தபால் திணைக்கள ஊழியர்களுக்கும் ஏனைய பெரும்பாலான அரச ஊழியர்களுக்கும் இப் பணம் கொடுபடாதது மிகவும் மனவருத்தத்திற்கு உரியது. இது தொடர்பாக பல மட்டங்களிலிருந்தும் திணைக்களத்துக்கும், நிதி அமைச்சருக்கும் முறைப்பாடு செய்திருந்தும் இதுவரை எதுவித பலனும் கிட்டவில்லை.

திறைசேரி பணம் ஒதுக்கவில்லையென்றும் இது தொடர்பாகதிறைசேரிக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளதாகவும் தபால் திணைக்கள அதிகாரிகள் தெரியப்படுத்தி வருகிறார்கள்.

வல்வெட்டித்துறையில்

# மக்கள் விற்பனை நிலையம் திறப்பதற்கு நடவடிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் வல்வெட்டித்துறையில் கூட்டுறவு மக்கள் விற்பனை நிலையம் ஒன்றையும், இரும்புவிற்பனை நிலையம் ஒன்றையும் திறந்து வைக்கவுள்ளது.

வல்வெட்டித்துறைப் பகுதி பாவனையாளர்களின் தேவைகளைக் கருத்திற் கொண்டே கூட்டுறவு மக்கள் விற்பனை நிலையத்தையும், இரும்பு விற்பனை நிலையத்தையும் திறந்து வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபை தெரிவித்தது.

பருத்தித்துறையில் முன்னர் இயங்கி வந்த பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தையும் இயங்கச்செய்வதற்கான நடவடிக்கைகளை ப. நோ. கூ. சங்கம் மேற்கொண்டுள்ளது. (25

# அன்னை பூபதிக்கு

## தீவக மக்களின்

வீர அஞ்சலி



# ஓர் ஆண்டு நினைவு அஞ்சலி



## செல்வன் தவமணிநாயகம் முரளிகிருஷ்ணா

### லெப்டினன் சிறைவாசன் 'சிறை'

| அன்னையின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 24. 11. 1967 | 21. 3. 1989 |

திதி: 8. 4. 1990

வீர சொர்க்கம் எய்திய செல்வன் தவமணிநாயகம் முரளிகிருஷ்ணா அவர்களின் ஓர் ஆண்டு நினைவு அஞ்சலி

தமிழ் மண்ணைக் காக்கவென்று சங்கற்பம் செய்து
சாகும்வரை குறிக்கோளை நிறைவேற்றி வைத்து
ஒன்றரை ஆண்டு வெலிக்கடையில் அடைபட்டு நின்று
ஈழமண்ணில் உன் குருதி உரமாக வைத்தாய்

களங்கண்டு களிக்கின்ற சிறுத்தையே எம்மை
கண்ணீருள் மூழ்கடித்து வீரசொர்க்கம் கண்டாய்
சித்திரத்தில் தீட்டி உன்னை சிலை செய்து வைப்போம்
புத்தகத்தில் போற்றி உன்தன் புகழ் கூறி நிற்போம்.

எங்கள் அன்பு முரளியின் ஆத்ம சாந்திக்கு என்றும் எமது பிரார்த்தனை.

'உதய தாரகை' மல்லாகம். பெற்றோர், சகோதரர்.

(B/318)


அழகிய கலர்ப்படம் எடுப்பதிலும், கலர்ப்

தேர்ந்த வைத்தியர்.

டாக்டர் டோமினிக்

(சென். பற்றிக்ஸ் கல்லூரி முன்பாக)

சென். பற்றிக்ஸ் வீதி,

யாழ்ப்பாணம்.

(B/292)

---

இன்று சுகாதார முறையில் நெல்லியடி கிராமத்தில்

வடை, சூசியம், மோதகம், மற்றும் குளிர்பான வகைகளுக்கும் பருகுவதற்கும் உண்பதற்கும் அத்துடன் கொழும்பு - யாழ்ப்பாணம் சேவையையும் திறம்பட நடாத்தி வரும்

நஷனல் ஹோட்டல் அன் கூல் பார்,

நெல்லியடி.

(B-325)

---

இசைப்பிரியர் தமக்கு விருப்பமான கீதங்களுக்கும் மற்றும்

பலவிதமான

பாடல்களையும்

நீங்கள் பதிவு செய்துகொள்வதற்கு

நாடவேண்டிய இடம்!

## கிரோ ரெக்கோடிங் பார்

நெல்லியடி

(B/324)

---

திரு. ... அவர்கள் மிகச் சிறப்பாக நிர்மாணித்து முடித்துள்ளார் (25)

---

## மெய்வல்லுனர் போட்டி


(வந்தாறுமூலை)

மட்/வந்தாறுமூலை கணேச வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி 15-3-1990 பி. பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி ஆர். முருகுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. மேற்படி விளையாட்டுப் போட்டியில் தாமரை இல்லம் முதலாம் இடத்தையும், மல்லிகை இல்லம் இரண்டாம் இடத்தையும் முல்லை இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. இவ்விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கோட்டக் கல்வி அதிகாரி ஏ. செபரெட்ணம் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கினார். (29)

---

தீவக மக்களின்

வீர அஞ்சலி



## ஊர்காவற்றுறை வர்த்தகர் சங்கம்

## ஊர்காவற்றுறை.

B/331

---

திதி: 8. 4. 1990

வீர சொர்க்கம் எய்திய செல்வன் தவமணிநாயகம் முரளிகிருஷ்ணா அவர்களின் ஓர் ஆண்டு நினைவு அஞ்சலி

தமிழ் மண்ணைக் காக்கவென்று சங்கற்பம் செய்து
சாகும்வரை குறிக்கோளை நிறைவேற்றி வைத்து
ஒன்றரை ஆண்டு வெலிக்கடையில் அடைபட்டு நின்று
ஈழமண்ணில் உன் குருதி உரமாக வைத்தாய்

களங்கண்டு களிக்கின்ற சிறுத்தையே எம்மை
கண்ணீருள் மூழ்கடித்து வீரசொர்க்கம் கண்டாய்
சித்திரத்தில் தீட்டி உன்னை சிலை செய்து வைப்போம்
புத்தகத்தில் போற்றி உன்தன் புகழ் கூறி நிற்போம்.

எங்கள் அன்பு முரளியின் ஆத்ம சாந்திக்கு
என்றும் எமது பிரார்த்தனை.

'உதய தாரகை' பெற்றோர், சகோதரர்.

மல்லாகம். (B/318)

---

அழகிய கலர்ப்படம் எடுப்பதிலும், கலர்ப் படச் சுருள்களை விரைவில் தரமான முறையில் குறைந்த செலவில் கழுவிக் கொடுத்தும் தனது சேவையின் 2வது வருடப்பூர்த்தியை வாடிக்கையாளருக்கும், நண்பர்களுக்கும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றனர்.

# ஜெகன் போட்டோ

399, மணிக்கூட்டு வீதி,

(பெருமாள்கோவிலருகில்)

யாழ்ப்பாணம்.

(B/134)

---

ஓடு, பூச்சாடிகள், பூக்கற்கள்,

கொங்கிறீற்கற்கள்,

கட்டிடப் பொருட்கள்

முதலியவற்றிற்கு நாடுங்கள்.

# இந்திரன் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி,

நெல்லியடி.

(B/323)

---

சனகலைமகள் சமூக நிலையம் நடாத்தும்

## விளையாட்டு விழா

காலம்: 15 - 5 - 1990

நிலைய விளையாட்டு தவிர

15 மைல் மரதன் ஓட்டம்

25 மைல் சைக்கிள் ஓட்டம்

நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் கழகங்கள் மற்றும் வீர வீராங்கனைகள் யாவரும் எதிர்வரும் 10-5-90 க்கு முன்னர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரதம விருந்தினர்கள்

திரு. சூசை அவர்கள் (விடுதலைப் புலிகள் வடமராட்சி மக்கள் முன்னணி பொறுப்பாளர்)

திரு. வை. வேலும்மயிலும் (உதவி அரசாங்க அதிபர்)

அன்பர்கள் அனைவரையும் வருகவென அன்புடன் அழைக்கின்றோம்.

துரை சண்முகசுந்தரம்
(செயலாளர்)
கலைமகள் சனசமூக நிலையம்
வல்லை றோட்
கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

(B/316)

---

தரம்மிக்க தங்க நகைகளுக்கு

இன்றே நாடுங்கள்!

# நபீஸா ஜுவல்லர்ஸ்

நபீஸா ஜுவல்லர்ஸ் ஸ்தாபனத்தார், மக்களுடன் நம்பிக்கையுடனும், நாணயத்துடனும் சேவை செய்து தமது 6ஆவது வருடத்தை பூர்த்தி செய்து இன்று 7ஆவது ஆண்டில் காலடி எடுத்துவைத்துள்ளனர். இந்நன்நாளில் எமக்கு ஆதரவு வழங்கிய வாடிக்கையாளர்கள், பொற்றொழிலாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

நபீஸா ஜுவல்லர்ஸ் 171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

NABEESA JEWELLERS 171, Kasthuriar Road, JAFFNA.

(B/329)

## சிந்தனைக்கு

''பொறுப்பில்லாமல் ஆற்றல் இல்லை; அதிகாரத்தின் கடைசித் துளியும் கடமையில் அடங்கியுள்ளது.

- ஐயான் மெக்லரன்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 21 - 03 - 90

## '' நாய்க்கு நடுக்கடலுக்குப் போனாலும்...''

'' நாய்க்கு, நடுக்கடலுக்குப் போனாலும் நக்குத் தண்ணீர்தான்'' என்பது ஒரு தமிழ்ப் பழமொழி.

''வடக்குக் கிழக்கு மாகாணப் புனரமைப்புக்கென வெளிநாடுகள் பலகோடி ரூபாய்களை வழங்கியிருந்தன. ஆனால் அப்பணத்தைக்கொண்டு ஒழுங்கான முறையான வேலைகள் நடைபெறவில்லை. வேலைகள் இன்னும் முடிவுறாமல் இருக்கின்றன. இதனால் வெளிநாட்டு நிறுவனங்கள் மேலும் உதவிகள் வழங்கத் தயங்குகின்றன. சில நாடுகள் கைவிரித்துவிட்டன.''

புனர்வாழ்வு அமைச்சுச் செயலாளர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன் மேற்கண்ட தகவலை வெளியிட்டிருக்கிறார்.

கடந்தகாலச் சம்பவங்களில் சேதமடைந்த பாடசாலைகள் மற்றும் கட்டிடங்கள், தொலைத் தொடர்புச் சேவைகள், வீதிகள், நீர்விநியோகத் திட்டங்கள், மின் இணைப்புக்கள் ஆகியவற்றைப் புனரமைக்க இருபத்தொரு நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் உதவியளித்தன.

இந்தப் பணத்தில் பத்துச் சதவீதமே செலவிடப் பட்டுள்ளது. இதனுடன் முப்பது சதவீதமான பணம் வாகனங்கள், வீதி ரோலர்கள் தொலைத் தொடர்புச் சாதனங்கள் வழங்குவதற்குச் செலவிடப்பட்டன.

மீதியான அறுபது சதவீதமான நிதியை செலவிட்டுப் புனரமைப்பு வேலைகள் முடிந்தால்தான் மேலும் உதவிகள் வழங்க முடியும் என்று அந்த நிறுவனங்களின் அதிகாரிகள் தெரிவித்துவிட்டனர்.

இந்த விபரங்களையும் புனரமைப்பு அமைச்சின் செயலாளர் லோகேஸ்வரனே தெரிவித்திருக்கிறார்.

கடந்தகால சம்பவங்களினால் அழிந்தும் சிதைந்தும் போன அத்தியாவசிய சேவைக் கட்டிடங்களும் சாதனங்களும் இன்னமும் தொல்பொருள் காட்சிச்சாலைகளாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன.

போர் தொடர்ந்து சிலசில இடங்களில் நடைபெற்ற காலத்திலும்கூட அத்தியாவசிய சேவைகளை புனரமைப்பதற்கு அரசாங்கத் திணைக்களங்கள் நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

இங்கு எல்லாம் சீராகி விட்டது. நாட்டை அபிவிருத்தி

# போபர்ஸ் பீரங்கி ஊழல்

# 64 கோடி ரூபாய் லஞ்சம்

# வாங்கியவர்கள் யார், யார்?

# ராஜீவ்காந்திக்கும் சம்பந்தமுண்டா?

'பீரங்கி பேர ஊழலில் 64 கோடி ரூபாய் லஞ்சம் வாங்கியது யார்?''

இந்த மாபெரும் கேள்விக்கான பதில் ஏறத்தாழ கிடைத்துவிட்ட மாதிரியான நிலை ஏற்பட்டிருக்கிறது.

போஃபர்ஸ் பீரங்கி பேர ஊழல் தொடர்பான பல ரகசிய வங்கி ரெக்கார்ட்டுகளை வெளியே கொண்டுவந்து 'இந்து' பத்திரிகையில் வெளியிட்ட பத்திரிகையாளர் சித்ரா சுப்பிரமணியம் அண்மையில் ஜெனிவாவிலிருந்து இந்தியாவுக்கு வந்து, வி. பி. சிங் அரசு கேட்ட உதவிகளைச் செய்தார். அப்போது அவர் அளித்த பேட்டியொன்றில்...

**கேள்வி:** ''ரகசியக் கணக்கு வைத்துள்ளவர்களின் பெயர் வெளியாகும்போது, அதில் உயர்மட்டத்தில் உள்ளவர்களும் சம்பந்தப்பட்டிருப்பார்களா?''

**சித்ரா:** ''உயர்மட்டம்வரை நிச்சயம் போகிறது. இல்லாவிட்டால் ஏன் அவ்வளவுமேல் மட்டத்தில் இந்த ஊழலை மறைக்க முயற்சித்திருக்க வேண்டும்?''

**கேள்வி;** ''மேல் மட்டம் என்பது ராஜீவ் காந்தியைத் தானே குறிக்கும்? அவரும் சம்பந்தப்பட்டிருக்கிறரா?''

**சித்ரா:** ''யாரையும் சம்பந்தமில்லாதவர்கள் என்று கருதவே முடியாது என்பதுதான் தற்போதைய நிலைமை!''

சுமார் நான்காண்டுகளாக ராஜீவ் அரசு ''பீரங்கி பேர ஊழலில் கமிஷன் தரப்படவில்லை. ஊழல் நடந்திருந்தாலும் அதில் இந்தியர்கள் யாரும் இல்லை. சுவிஸ்வங்கி ரகசிய கணக்குகளை வெளியிட வைக்க வழி இல்லை'

போலீஸ் தலைவர் டாக்டர் ஸ்க்மிட், பீரங்கி பேரம் தொடர்பான ஐந்து வங்கிக் கணக்குகளை முடக்க உத்தரவிட்டார்.

அதுமட்டுமல்ல... ஆறாவதாக ஒரு கணக்கும் உள்ளது. அதுவும் இந்தப் பேரத்துடன் சம்பந்தப்பட்டதாகத் தெரிகிறது. அதையும் முடக்க வேண்டுமா?' என்று ஸ்க்மிட் கேட்டார்.

ஆறாவது கணக்கு எப்படி வந்தது? பழைய ஐந்து கணக்குகளில் ஒன்று ஏ. ஈ. சர்வீஸஸ் என்ற பெயரில் இருந்தது. அதிலிருந்த பணம் முழுவதையும் எடுத்து வேறு பெயரில் ஆறாவது கணக்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று புதிய தகவல் சொன்னார் ஸ்க்மிட்.

ஆறாவது கணக்கையும் முடக்க வேண்டுமானால் இந்திய அரசு தனி மனு தர வேண்டும் என்று கூறப்பட்டது. அதாவது, இந்தப் பேரத்தில் யார் யார் பயனடைந்திருப்பார்கள் என்று இந்தியஅரசு கருதுகிறதோ, அவர்களின் பட்டியலைத் தர வேண்டும். அவர்களில் ஒருவரின் கணக்காவது ஆறாவது கணக்கு இருந்தால் அது முடக்கப்படும் என்றார்

கூறும் காரணங்கள் சரியல்ல என ஸ்விஸ் விசாரணை நீதிபதி கருதினால், உடனே அந்தப் பெயர்களை அதிகாரபூர்வமாக இந்திய அரசுக்குத் தெரிவிக்க நீதிபதி உத்தரவிட்டுவிடுவார்! இன்னும் சில வாரங்களுக்குள் இந்த உத்தரவும் வந்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது!

அதற்கு முன்பாகவே இன்ஃபார் மலாக ரகசியக் கணக்கு ஆசாமிகளின் பெயர்களை ஸ்விஸ் பொலீஸார், இந்திய அரசு அதிகாரிகளிடம் தெரிவித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

போஃபர்ஸ் பீரங்கி பேர ஊழலில் தரப்பட்ட பணம் முழுவதும் ஐந்து கணக்குகளுக்குப் போயுள்ளதாகக் கூறினோம் அல்லவா? அந்த விவரங்கள் இவைதான்.

இந்திரா காந்தி, சஞ்சய் காந்தி, மொரார்ஜியின் மகன் காந்தி தேசாய் முதலியோருக்கு நெருக்கமான இந்துஜா சகோதரர்களின் பிட்கோ என்ற கம்பெனிக்குப் பணம் தரப்பட்டது. பிட்கோ தன் கணக்கை மொரெஸ்கோ என்ற பெயருக்கு மாற்றச் சொல்லி விட்டது. மொரெஸ்கோ கம்பெனியின் வங்கிக்



கணக்கு ஆரம்பித்தது தவிர ஆறாவது கணக்கிலிருந்தும் கொஞ்சம் பணத்தை பெல்ஜியத்துக்கு அஜிதாப் அனுப்பிவிட்டதாகவும் கூறப்படுகிறது. பெல்ஜீயத்தில் இந்தப் பணத்தைக் கையாளும் பொறுப்பை ராஜீவின் பைலட் நண்பரான ரமேஷ் சர்மா என்பவர் கவனித்து வருவதாக சி. பி. ஐ கருதுகிறது. இப்போது சி. பி. ஐ அதிகாரிகள் பெல்ஜியத்துக்கு விரைந்திருக்கிறார்கள்.

ஆறாவது கணக்கிலிருந்து தெரிய வருகிற அதிர்ச்சியான தகவல்கள் அந்த லஞ்சப்பணம் மிகப்பெரிய புள்ளிகளுடையதாக இருக்கலாம் என்பது மட்டுமல்ல அந்தக் கணக்கில் உள்ள பணம் வேறு ஊழல் பேரங்களிலிருந்தும் வந்ததாக இருக்கலாம் என்பதுதான்!

ஏனென்றால்பீரங்கி பேரத்தில் மொத்த கமிஷனே 64 முதல் 74 கோடி ரூபாய் வரைதான் என்று கருதப்பட்டது. ஆனால் ஆறாவது கணக்கில் மட்டுமே இதைவிடப் பலமடங்கு அதிகமான பணம் போடப்பட்டிருப்பதாகத் தெரிய வந்திருக்கிறது மீதிப் பணம் எந்த பேரத்திலிருந்து வந்ததாக இருக்கலாம் என்று சி. பி. ஐ அதிகாரிகள் ஆராய்ந்து வருகிறார்கள்.

அனேகமாக ஜேர்மன் நீர்மூழ்கிக் கப்பல் பேரப்பணம் இதில் இருக்கக்கூடும் என்றே கருதுகிறார்கள். நீர்மூழ்கிக் கப்பல் பேரத்தில் கைமாறிய லஞ்சப் பணம் 30 கோடி ரூபாய் என்பது மதிப்பீடு.

இந்தப் பேரத்துக்கு ஒரு பெரிய வரலாறே இருக்கிறது.

இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது ஜேர்மன் நீர்மூழ்கிகளை வாங்குவதா, ஸ்விஸ் நாட்டு நீர்மூழ்கிகளை வாங்குவதா என்று ஆலோசனை நடந்து வந்தது.

நடுவே ஜனதா ஆட்சி வந்து போய், மீண்டும் இந்திரா காந்தி 1980 ல் பிரதமரானதும் இந்தப் பரிசீலனை தொடர்ந்து நடந்தது. மே 1980 வரையில் ஸ்விஸ் நீர்மூழ்கிக்கே வாய்ப்பு அதிகமாக இருந்தது.

1980 ஜூன் மாதத்தில் சஞ்சய் காந்தியின் உத்தரவின் பேரில் பாதுகாப்புத்துறையின் இணைச்செயலாளர் எஸ். எஸ். சித்து (தமிழ் நாட்டில் ஆளுநர் ஆட்சியின்போது ஆலோசகராக இருந்த அதே சித்து தான் இவர்) ஜேர்மனிக்குப் போய் பேசினார். அப்போதுதான் 30 கோடி ரூபாய் கமிஷன் நிச்சயமானதாம். ஆனால் ஜூன் மாதமே சஞ்சய் காந்தி விபத்தில் இறந்து விட்டார்.

சித்து தந்த அறிக்கையின்படி ஜெர்மன் நீர்மூழ்கிகளையே வாங்க முடிவாயிற்று.

1981 ல் ஒப்பந்தம் போடப்பட்டது. ஆனால் பேசியபடி 30 கோடி ரூபாய் கமிஷன் வந்து சேரவில்லை.

சஞ்சய் காந்தி இறந்துவிட்டதால் கமிஷனைத் தராமலே டபாய்க்கலாம் என்று ஏஜெண்டுகளாகச் செயல்பட்ட இந்துஜா சகோதரர்

(6-ம் பக்கம் பார்க்க)

**நான்காண்டுகளாக ராஜீவ் அரசு ''பீரங்கி பேர ஊழலில் கமிஷன் தரப்படவில்லை, ஊழல் நடந்திருந்தாலும் அதில் இந்தியர்கள் யாரும் இல்லை. சுவிஸ் வங்கி ரகசி கணக்குகளை வெளியிட வைக்க வழிஇல்லை என்று பலவிதமான பல்லவிகளைப் பாடிவந்தது. ஆனால் ஆட்சி மாறியதும் இரண்டே மாதங்களுக்குள் சுவிட்சர்லாந்தில் உள்ள ஆறு ரகசிய வங்கிக் கணக்குகள் முடக்கி வைக்கப்பட்டுள்ளன.**

இந்தப் பணத்தில் பத்துச் சதவீதம் செலவிடப்பட்டுள்ளது. இதனுடன் முப்பது சதவீதமான பணம் வாகனங்கள், வீடு றோலர்கள் தொலைத் தொடர்புச் சாதனங்கள் வழங்குவதற்குச் செலவிடப்பட்டன.

மீதியான அறுபது சதவீதமான நிதியை செலவிட்டுப் புனரமைப்பு வேலைகள் முடிந்தால்தான் மேலும் உதவிகள் வழங்க முடியும் என்று அந்த நிறுவனங்களின் அதிகாரிகள் தெரிவித்துவிட்டனர்.

இந்த விபரங்களையும் புனரமைப்பு அமைச்சின் செயலாளர் லோகேஸ்வரனே தெரிவித்திருக்கிறார்.

கடந்தகால சம்பவங்களினால் அழிந்தும் சிதைந்தும் போன அத்தியாவசிய சேவைக் கட்டிடங்களும் சாதனங்களும் இன்னமும் தொல்பொருள் காட்சிசாலைகளாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன.

போர் தொடர்ந்து சிலசில இடங்களில் நடைபெற்ற காலத்திலும்கூட அத்தியாவசிய சேவைகளை புனரமைப்பதற்கு அரசாங்கத் திணைக்களங்கள் நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

இங்கு எல்லாம் சீராகி விட்டது. நாட்டை அபிவிருத்தி செய்வதே எங்கள் முதல் வேலை என்று இந்திய வானொலி நிருபர்களுக்கு அடிக்கடி பேட்டியளித்து வந்த வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த வரதராஜப்பெருமாளும் சகாக்களும் இந்தப் பணத்தையாவது உபயோகப்படுத்துவதற்குப் புனரமைப்புத் திட்டங்களைத் தயாரித்து அரசாங்கத்தின் முன் வைத்திருக்கலாமே!

இத்திட்டங்களைச் செயல்படுத்த அரசு மறுத்திருந்தால் உதவியளித்த நாடுகளிடம் உரக்க முறையிட்டுக் காரியம் சாதித்திருக்கலாம்!

இந்திய அரசு பலகோடி ரூபாய்களை மாகாண அரசுக்கு அபிவிருத்திக்காகக் கொடுத்ததாகப் பிரசாரம் செய்தது. ஆனால் அதை மாகாண அரசு மறுக்கவில்லை; தாம் செய்த அபிவிருத்திகள் பற்றி அறிவிக்கவுமில்லை.

வடக்கு மாகாண சபைதான் உருப்படியாக எதையும் செய்யவில்லை. இனி அதைப்பற்றிப் பேசியும் பயனில்லை.

ஆனால் நிலைமை மாறிக்கொண்டு வந்ததையும் சபையினர் மூட்டை முடிச்சுக்களைக் கட்டத் தொடங்கியதும் அரசாங்கத் திணைக்களங்களும் அதிகாரிகளும் புனரமைப்புக்கான திட்டங்களைப் போர்க்கால அடிப்படையில் தயாரித்திருக்க வேண்டாமா?

பணம் இல்லை என்ற நிலை போய்ப் புனரமைப்புக்கும் அபிவிருத்திக்கும் பண உதவி கிடைத்தும் அவற்றைச் சிவப்பு பயன்படுத்தாவிட்டால் இந்தத் திணைக்களங்களும் அதிகாரிகளும் இருந்துதான் என்ன பயன்?

நாம் சில தினங்களுக்கு முன் இப் பந்தியில் இரண்டாவது உலக மகாயுத்தத்தில் அழிந்தும் சிதைந்தும் போன ஜப்பான், ஜேர்மனி நாடுகள் உலகமே வியக்கத்தக்கவகையில் முன்னேறியதற்குக் கடும் உழைப்பு முக்கியம் என்பதைக் குறிப்பிட்டிருந்தோம்.

இங்கும் மக்கள் கடின உழைப்புக்குத் தயாராக இருக்கிறார்கள். சரியான திட்டம் தான் தேவை.

திட்டம் வகுக்க வேண்டியவர்கள் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து துரிதமாகச் செயல்பட வேண்டும். இப்பொழுது உள்ள பணத்தைப் புனரமைப்புக்குச் செலவிட்டு அழிந்த சுவடுகளை இருந்த இடம் தெரியாமல் செய்ய வேண்டும்.

இதன்பின்னர் புதிய அபிவிருத்திக்கு வரும் பணத்தைப் பெற்று புதிய சமுதாயத்தையே உருவாக்க வேண்டும்.

---

**நான்காண்டுகளாக ராஜீவ் அரசு ''பீரங்கி பேர ஊழலில் கமிஷன் தரப்படவில்லை, ஊழல் நடந்திருந்தாலும் அதில் இந்தியர்கள் யாரும் இல்லை. சுவிஸ் வங்கி ரகசி கணக்குகளை வெளியிட வைக்க வழிஇல்லை என்று பலவிதமான பல்லவிகளைப் பாடிவந்தது. ஆனால் ஆட்சி மாறியதும் இரண்டே மாதங்களுக்குள் சுவிட்சர்லாந்தில் உள்ள ஆறு ரகசிய வங்கிக் கணக்குகள் முடக்கி வைக்கப்பட்டுள்ளன.**

---

களும் சம்பந்தப்பட்டிருப்பார்களா?''

சித்ரா: ''உயர்மட்டம்வரை நிச்சயம் போகிறது. இல்லாவிட்டால் ஏன் அவ்வளவுமேல் மட்டத்தில் இந்த ஊழலை மறைக்க முயற்சித்திருக்க வேண்டும்?''

கேள்வி; ''மேல் மட்டம் என்பது ராஜீவ் காந்தியைத் தானே குறிக்கும்? அவரும் சம்பந்தப்பட்டிருக்கிறரா?''

சித்ரா: ''யாரையும் சம்பந்தமில்லாதவர்கள் எள்று கருதவே முடியாது என்பது தான் தற்போதைய நிலைமை!''

சுமார் நான்காண்டுகளாக ராஜீவ் அரசு ''பீரங்கி பேர ஊழலில் கமிஷன் தரப்படவில்லை. ஊழல் நடந்திருந்தாலும் அதில் இந்தியர்கள் யாரும் இல்லை. சுவிஸ்வங்கி ரகசிய கணக்குகளை வெளியிட வைக்க வழி இல்லை' என்று பலவிதமான பல்லவிகளைப் பாடி வந்தது. ஆனால் ஆட்சி மாறியதும் இரண்டே மாதங்ளுக்குள் சுவிட்சர்லாந்தில் உள்ள ஆறு ரகசிய வங்கிக் கணக்குகள் முடக்கி வைக்கப்பட்டுள்ளன.

இது எப்படி நடந்தது? முடக்கி வைக்சப்பட்டுள்ள கணக்குகள் யாருடையவை.

வி. பி சிங் பிரதமரானதும் சி. பி. ஐ. அதிகாரிகளை அழைத்து, சுவிட்சர்லாந்து அரசிடம் வங்கிக் கணக்கு ரகசியங்களை வெளிப்படுத்தக் கோரும் விதத்தில் புதிய குற்றப்பத்திரிகை (F, I. R.) ஒன்றைத்தயாரிக்கச் சொன்னார். இந்தியச் சட்டப்படியும் சுவிஸ் சட்டப்படியும் குற்றம் செய்யப்பட்டதாகக் கருதினால் மட்டுமே ரகசியக் கணக்கை சுவிஸ் அரசு பகிரங்கப்படுத்தும் என்பது நடைமுறை.

சி. பி ஐ தயாரித்த முதல் தகவல் அறிக்கை குழப்பமாக ஏனோதானோவென்று இருந்தது. அதை அனுப்பினால் நிச்சயமாக சுவிஸ் அரசு நிராகரித்துவிடும் என்கிற நிலை.

உடனே வி பி. சிங், தான் நிதி மந்திரியாக இருந்த போது பல ரெய்டுகளை நடத்த உதவியாக இருந்த அதிகாரி புரேலாலையும், அரசின் கூடுதல்சொலிசிட்டர் ஜெனரல் அருண் ஜெய்ட்லியையும் ஸ்விட்சலாந்துக்கு அனுப்பி வைத்தார். ரிலையன்ஸ் ஊழல்களை அம்பலப் படுத்திய பத்திரிகையாளர் ஆடிட்டர் எஸ். குருமூர்த்தி சி. பி. ஐ. தயாரித்த முதல் தகவல் அறிக்கையை சீராக்கிக் கொடுத்தார். 'இந்து' பத்திரிகையாளர்கள் என். ராமும், சித்ரா சுப்ரமணியமும் உதவிக்கு அழைக்கப்பட்டார்கள்.

புதிய வேண்டுகோள் சென்றவுடனே ஸ்விஸ் நாட்டு அதிகாரிகள்

களின் பட்டியலைத் தர வேண்டும். அவர்களில் ஒருவரின் கணக்காக, ஆறாவது கணக்கு இருந்தால் அது முடக்கப்படும் என்றார் ஸ்க்மிட்.

இந்திய அரசு 18 பேர் பட்டியலை அளித்தது இந்த 18 பேரில் ஒருவரின் கணக்கு தான் ஆறாவது கணக்கு என்று உறுதிப்படுத்திக் கொண்டு அதையும் முடக்க உத்தரவிட்டார் ஸ்க்மிட்!

ஆறாவது கணக்கு யாருடையது? யார் அந்த 18 பேரில் ஒருவர்?

இந்த ஆறாவது கணக்கு வைக்கப்பட்டுள்ள இடம் ஸ்விஸ் நாட்டிலுள்ள வங்கிகளைப் போன்ற நிதிநிறுவனங்களில் ஒன்றான பிக்கெட் கம்பனி இந்த பிக்கெட் சம்பெனியில் இந்தக்கணக்கின் (மர்மமான) சொந்தக்காரரர் சார்பில் அதை இயக்கும் அதிகாரம் உடைய வழக்கறிஞரின் பெயர் யூவ்ஸ் பிரேன் இதே யூவ்ஸ் பிரேன்தான் ராஜீவின் நெருங்கிய நண்பரான நடிகர் அமிதாப்பச்சனின் தம்பி அஜிதாப்பச்சனின் மருந்து தயாரிப்பு கம்பெனிகளான அர்கோலேப் அர்கோபார்மா இரண்டுக்கும் வெளிநாட்டு வங்கிகளில்கணக்குகள் துவக்க உதவி செய்தவர்!

எனவே ஆறாவது கணக்கு அஜீதாப்பச்சனுடையதாகத் தான் இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

வி. பி. சிங் அரசு கோரிய தன் பேரில் ஆறு ஸ்விஸ் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டிருப்பது முதல் கட்டமாகும். அடுத்த கட்ட நடவடிக்கை என்பது இந்தியாவில் வழக்குப் பதிவாகி விசாரணை தொடங்கும். இது ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. மூன்றாம் கட்ட நடவடிக்கை ரகசியக்கணக்கின் சொந்தக்காரரர்களுக்கு ஸ்விஸ் அதிகாரிகள் நோட்டீஸ் அனுப்புவார்கள். உங்கள் பெயரை ஏன் வெளியிடக் கூடாது என்று தகுந்த காரணம் காட்டவும் என்பதே நோட்டீஸ். இதுவும் அனுப்பப்பட்டாயிற்று. அவர்கள்

தரப்பட்டது. பிட்கோ தன் கணக்கை மொரெஸ்கோ என்ற பெயருக்கு மாற்றச் சொல்லி விட்டது. மொரெஸ்கோ சம்பெனியின் வங்கிக் கணக்குகள் மூன்று.

ஒன்று லோட்டஸ் இதிலுள்ள பணம் இந்துஜாக்களுடையது என்று கருதப்படுகிறது.

இரண்டாவது துலிப். இந்தப் பணமும் ஓர் இந்தியரின் பெயரில் இருப்பதாகக் கருதப்படுகிறது.

மூன்றாவது மாண்ட் பிளான்க் இதிலுள்ள பணம் இத்தாலியர் ஒருவருடைய பங்கென்று கருதப்படுகிறது. ராஜீவ் மனைவி சோனியா காந்தியின் சகோதரர் அல்லது அவர் குடும்பத்துக்கு நெருக்கமான இத்தாலிய வியாபாரி ஒட்டாவியோ கொட்ரோச்சி தான் இந்த இத்தாலியர் என்று கூறுகிறார்கள்.

நான்காவது வங்கிக்கணக்கு ஸ்ருவன்ஸ்கா என்ற பெயரிலிருப்பதாகும். இதன் சொந்தக்காரரர் போஃபர்ஸ் பீரங்கி தயாரிக்கும் நோபல் இண்டஸ்ட்ரீஸின் டெல்லி ஏஜெண்டாக இருந்த வின்சத்தா என்பதே தகவல். வின்சத்தாவின் கணக்குதான் ஸ்ருவன்ஸ்கா என்பதற்கான ரெக்கார்டுகளை முன்பே இந்து பிரசுரித்து விட்டது.

ஐந்தாவது கணக்குதான் ஏ. ஈ சர்வீஸஸ் இது ஒரு விசித்திரமான கம்பெனி. போஃபர்ஸ் பீரங்கிகளை வாங்குவதற்கான ஒப்பந்தம் 1986 மார்ச் 31 க்குள் கையெழுத்தாக ஏற்பாடு செய்தால்தான் ஏ ஈ சர்வீஸஸுக்கு கமிஷன் தரப்படும் என்று கண்டிஷன் போட்டுக் கொண்டிருந்தது. போஃபர்ஸ் நிறுவனம் அதேபோல ஒப்பந்தம் அதே தேதிக்குள் நிறைவேற்றப்பட்டது. ஏ. ஈ. சர்வீஸஸ் கணக்கிலிருந்து சமீபத்தில் பணத்தை எடுத்து ஆறாவதாகக் கணக்கு ஆரம்பிக்கப் பட்டது பற்றி ஏற்கனவே கூறப்பட்டிருக்கிறது.

ஏ. ஈ. சர்வீஸஸிலிருந்து பணமெடுத்து ஆறாவது

திருக்கிறார்கள்.

ஆறாவது கணக்கிலிருந்து தெரிய வருகிற அதிர்ச்சியான

வேண்டும் என்று கூறப்பட்டது. அதாவது, இந்தப் பேரத்தில் யார் யார் பயனடைந்திருப்பார்சள் என்று இந்தியஅரசு கருதுகிறதோ, அவர்

காந்தி, மொரார்ஜியின் ம...

காந்தி தேசாய் முதலியோருக்கு நெருக்கமான இந்துஜா சகோதரர்களின் பிட்கோ என்ற கம்பெனிக்குப் பணம்

வர் கவனித்து வருவதாக சி. பி. ஐ கருதுகிறது. இப்போது சி. பி. ஐ அதிகாரிகள் பெல்ஜியத்துக்கு விரைந்

சித்து தான் இவர்) ஜெர்மனிக்குப் போய் பேசினார். அப்போதுதான் 30 கோடி ரூபாய் கமிஷன் நிச்சயமானதாம். ஆனால் ஜூன் மாதமே சஞ்சய் காந்தி விபத்தில் இறந்து விட்டார்.

சித்ரா தந்த அறிக்கையின் படி ஜெர்மன் நீர்மூழ்கிகளையே வாங்க முடியவாயிற்று.

1981 ல் ஒப்பந்தம் போடப்பட்டது. ஆனால் பேசியபடி 30 கோடி ரூபாய் கமிஷன் வந்து சேரவில்லை.

சஞ்சய் காந்தி இறந்துவிட்டதால் கமிஷனைத் தராமலே டபாய்க்கலாம் என்று ஏஜெண்டுகளாகச் செயல்பட்ட இந்துஜா சகோதரர்

(6-ம் பக்கம் பார்க்க)

---

# அராலி வடக்கு குடிநீர் விநியோகச் சீர்குலைவு

ஆசிரியர்
ஈழநாதம்

அராலியில் 40,000 கலனுக்குக் கூடுதலான குடிநீரைக் கொள்ளக்கூடிய ஓர் கொள்கலன், கிராமத்தை அழகுபடுத்துவது போன்று நிமிர்ந்து நிற்கின்றது.

வற்றாத நல்ல குடிநீரைக் கொண்ட இரண்டு கிணறுகளும், அதன் பக்கலிலே நீரிறைக்கும் இயந்திரங்களைக் கொண்ட இரண்டு விடுதிகளும் கட்டப்பட்டுள்ளன. இந்த இரண்டு விடுதிகளுக்குள்ளும் நீரிறைக்கும் பெரிய இயந்திரமும், இரண்டு சிறிய இயந்திரங்களும் பூட்டப்பட்டுள்ளன. இருந்தும் குடிநீர் விநியோகம் காலை 6-00 மணி தொடக்கம் 6-30 மணி வரை என்பதே அதிகாரிகளால் நிர்ணயிக்கப்பட்ட நேரமெனினும் ஊழியரின் வருகைக்கும், வசதிக்குமேற்ப காலை 6-30 மணியாகவோ அல்லது 6-45 மணிக்கோ நீர் திறக்ப்படுவதுமுண்டு.

வாரத்தில் ஓரிரு நாட்கள் திறபடாது நின்றுவிடும் இந்நீர் விநியோகம். நெல் அறுவடை காலத்தே மாசக் கணக்காகவோ, கிழமைக் கணக்காகவோ குடிநீர் விநியோகிக்கப்படமாட்டாது. வரியிறுப்பாளர்கள் பல மகஜர்களைக் கடந்த காலத்தே நிர்வாகிகளுக்கனுப்பியும் நடவடிக்கை மந்த கதியிலேயே போய்க் கொண்டிருந்தது.

1. கடந்த 3 மாச காலமாக பெரிய நீர் இறைக்கும் இயந்திரத்தின (FAN BELT) காற்றாடி சுற்றும் தொல் கருவி பழுதடைந்து, திருத்தப்படாமையால் பெரிய நீரிறைக்கும் இயந்திரம் பழுதடைந்த நிலையிலுள்ளது.

2. ஓர் சின்ன நீரிறைக்கும் இயந்திரத்தின் (Foot Valve) நீருள்ளிருக்கும் குழாயின் அடிப்பாக ஆணி உடைந்து இரண்டு மாசமாகியும் திருத்தாது பழுதடைந்த நிலையிலுள்ளது.

3. மற்ற சிறிய நீரிறைக்கும் இயந்திரம் மிக அண்மையில் பொருத்தப் பட்டதெனினும், அதில் பொருத்தப்பட்ட குழாயைக் கழற்றிவிட்டு' கிராம விசமிகள் செய்துவிட்டார்களெனத் தவறை கிராமத்தவரின் மீது சுமத்தி நீண்ட காலமாக இந்த யந்திரமும் செயலிழந்து நிற்கிறது மொத்தமாக மூன்று இயந்திரங்களும்செயலிழந்து, குடிநீர்விநியோகம்சீரழிந்துபோயுள்ளது.

அராலி கிராமசபையும், நீர்வள வடிகாலமைப்பு சபை ஆகிய இரண்டு ஸ்தாபனமுமே இச் சீர்குலைவுக்குக் காரணமென்று சொல்ல வேண்டும்.

எஸ். ஆர். அருமைநாயகம்
அராலி வடக்கு.

---

## மக்கள் மடல்

---

# தொடர்பில்லை

யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் என்ற பெயரில் கடந்த 4-3-90 இல் (ஞாயிறு) ஈழநாதம் பத்திரிகையிற் பிரசுரமான யாழ். பல்கலைக் கழக நூலகம் சம்பந்தமான செய்திக்கும் யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதை அறியத் தருகிறோம்.

எஸ். பிரபாங்கன்
செயலாளர்
யாழ். பல்கலைக்கழக
மாணவர் சங்கம்

ஈழநாதம்

# இலங்கையில் இயங்கும் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை மூட உத்தரவு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள அமெரிக்கத்துதரகத்தில் இயங்கிவரும் இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவை அடுத்தமாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் மூடிவிடுவதென்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவை மூடிவிடுவதாகவும் கூடிய விரைவில் கிடைக்கும் சந்தர்ப்பத்தின்போது இது நிறைவேற்றப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தை பலஸ்தீன மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனமாக இஸ்ரேல் அங்கீகரித்து. ஆகிரமிக்கப்பட்ட பலஸ்தீன பிரதேசத்தில் இருந்து இஸ்ரேல் தனது படைகளை வாபஸ் பெற்று மத்திய கிழக்கு சம்பந்தமாக அமெரிக்கா தெரிவிக்கும் சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டால் இலங்கை இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவுகளை ஆரம்பிக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளர்.

அடுத்தமாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் இதனை மூடிவிட நடவடிக்கை எடுக்கும்படியும் ஜனாதிபதி வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்னாவைக் கேட்டுள்ளார்.

இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவு இலங்கைத் தமிழ்த் தீவிரவாத நடவடிக்கைகளையடுத்து முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்டது. முன்னரும் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியின் போதும் மூடப்பட்டது.

இலங்கையில் இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவு இருப்பதால் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் பாதிக்கப்பட்டு வருவதாலும், இலங்கையில் உள்ள முஸ்லிம் அமைப்புகள் விடுத்த கோரிக்கைகளினாலும் ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளார்.

## வெள்ள நிவாரண காசோலை இன்றி கூட்டு. சங்கங்களில் நிதி நெருக்கடி

(கல்லாறு களுவாஞ்சிக்குடி)

இவ் வருடம் தை மாதம் உதவி அரசாங்க அதிபரின் பட்டியலுக்கமைவாக, பொது மக்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களால் வழங்கப்பட்ட வெள்ள நிவாரணக் கொடுப்பனவுகளுக்கான காசோலை இன்றும் கச்சேரியால் வழங்கப்படவில்லை என கூட்டுறவு வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன.

வெள்ள நிவாரணப் பொருட்கள் வழங்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வசதியோ, முற்பண வசதியோ சமூக சேவைப் பகுதியால் செய்து கொடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சங்கங்கள் சொந்த நிதியை அல்லது வங்கி தற்காலிக மேலதிகப் பற்றை உபயோகித்தே வெள்ள நிவாரணப் பொருட்களை விநியோகம் செய்தன. இதனால் தற்பொது இச் சங்கங்கள் மிகுந்த நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளன.

இம்மாதம் உணவு முத்திரைப் பொருட்கள் வழங்குவதற்கான சமூகசேவைப் பகுதியால் வழங்கப்படும் முற்பணமும் வழங்கப்படவில்லை.

இதனால் உணவு முத்திரைப் பொருட்கள் விநியோகத்திற்கான ஒழுங்குகளைக் கூட மேற்கொள்ள முடியாமல் சங்கங்கள் திணறுகின்றன. இதனால் புத்தாண்டுக்குரிய கொள்வனவுகளையும் சிறப்பாக மேற்கொள்ள முடியாத நிலைக்கு சங்கங்கள் தள்ளப்பட்டுள்ளன.

சங்கங்கள் சுறு சுறுப்பாக இயங்கக் கூடிய சூழல் உருவாகியும், பாதுகாப்பின்மை பற்றிய அச்சம் முழுமையாக நீங்கியும், நிதி முடங்களால் சங்கங்கள் அவதியுறுகின்றன.

இதுபற்றி மட்டக்களப்பு கச்சேரி சமூகசேவைப் பகுதியினரோடு தொடர்பு கொண்ட போது, "இதற்கான ஒதுக்கீடு இன்றும் கிடைக்கவில்லையென்றும், வானொலி தொடர்பூடாக இவ் ஒதுக்கீட்டைப் பெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன" என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொடுப்பனவு தாமதத்தால் பொதுமக்களே பெரிதும் பாதிப்படைவர். (45)

## தபாற் கந்தோர் நலன்புரிச் சங்கக் கூட்டம்

(வவுனியா)

வவுனியா தபாற் கந்தோர் நலன் புரிச் சங்கத்தின் இந்த ஆண்டுக்கான கூட்டம் இம் மாதம் 18 ஆந் திகதி நடைபெற்றது.

வவுனியா 'றெக்ரேஷன் இளப்பில்' நடைபெற்ற இக் கூட்டத்திற்கு இளைப்பாறிய பிரதம தபால் அதிபர் எஸ். அரியநாயகம் அவர்கள் தலைமை தாங்கினார்.

தலைவராக, ஏ. பரமானந்தம், செயலாளராக எம். அல்பிறேட், பொருளாளராக பி. தர்மசீலன் காப்பாளராக எஸ் மயில்வாகனம் ஆகியோர் நடப்பு வருட நிர்வாக உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர். (தி

## தும்பிக்கையுடன் பிறந்த பசுக்கன்று

(வத்தளை)

வத்தளை ஹினிகெதன உதவி அரசாங்க பிரிவில் தோட்டமொன்றில் பசு ஒன்று தும்பிக்கையுடனும், இரண்டு தந்தங்களுடனும் கன்று ஒன்றை ஈன்றுள்ளது. இச் சம்பவம் சுற்று வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாம்.

## பூநகரியில் இவர் தற்கொலை

(பூநகரி)

ஒரு வாரத்தினுள் பூநகரியில் இருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ளனர். இருவரும் இளம் வயதினராவர். பூநகரி மட்டுவில் நாட்டைச் சேர்ந்த பூ. அன்பழகி (வயது 22) என்பவரும் பூநகரி கறுக்காய்த் தீவைச் சேர்ந்த வி. ரகுநாதன் (வயது 21) என்பவருமே கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டவராவர். மாணமான ரகுநாதன் என்பவர் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் க. பொ. த. ப. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது

## 64 கோடி --

(5-ம் பக்கத் தொடர்ச்சி...)

கள் நினைத்ததாகத் தெரிகிறது.

ஆகவே இந்துஜாக்களுடன் எந்தப் பேரமும் கூடாது

## கள்ளச் சாராயம் பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ். நகரில் 325 போத்தல் கள்ளச் சாராயம் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டது. இக் கொழும்பிலிருந்து வரும் கள்ளச்சாராயம் தொடர்பாக முன்னரே விடுதலைப் புலிகள் எச்சரிக்கை விடுத்திருந்தும் குறிப்பிடத்தக்கது.

## அஸ்ரப்...


( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து அறிக்கை விடுவதைத் தவிர வேறு எதையும் அஷ்ரப் செய்யவில்லை என்பதும் முஸ்லிம் மக்களைக்காட்டி இந்திய இராணுவத்திடமிருந்து சில ஆயுதங்களை அஷ்ரப் பெற்றிருந்தாரென்பதும் முஸ்லீம் மக்களுக்கும் தெரியும். இதனால்தான் ஆறாவது திருத்தம் நீக்கப்பட்டால் தமது தலைமை பறிபோய் விடுமென்பதாலே அஷ்ரப் இதை எதிர்க்கிறார். அவருக்கு முஸ்லிம் மக்கள்மீதோ தேசிய ஒருமைப்பாட்டின்மீதோ உண்மையான அக்கறை கிடையாது என்றார்.

## முஸ்லிம் மக்களுக்கும் தமிழர்போல் உரிமை

ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கும் பிரேரணை எதிர்க்கட்சிகளால்தோற்கடிக்கப்பட்டால் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் நடவடிக்கைகள் எவ்வாறு இருக்கும் என வினாவப்பட்டமைக்கு அந்நிலைமை ஏற்படும் பட்சத்தில் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் இது சம்பந்தமான முடிவை மேற்கொள்ளும் என தெரிவித்தார்,

முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகள் பற்றி வினாவப்பட்டபோது அவர்களுக்கு தமிழ் மக்களுக்கு இருப்பது போன்ற சகல உரிமைகளும் வழங்கப்படும் என்றும் கலாசாரம் சம்பந்தமான உரிமைகள் விசேடமாக கவனத்திற் கொள்ளப்படும் என்று தெரிவித்தார். மேலும் அவர்கருத்துத் தெரிவிக்கையில் நாங்கள் இவர்களின் உயர்கல்வி, விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட்டிடம் சகல முஸ்லிம் கட்சிகளையும் சேர்த்து முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அது சம்பந்தமாக எமக்கு விபரம் தரும்படி கோரியுள்ளோம். அவ்வாறு தரப்படும் விபரத்தினை அடிப்படையாகக் கொண்டு வடக்கு கிழக்கில் வாடும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை அணுகவுள்ளோம் எனவும் தெரிவித்தார்,



## வீடுகளில் கள், சாராயம் விற்பனைக்குத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியை அண்டிய முலவைப் பகுதியில் வீடுகளில் வைத்துக் கள், சாராயம் விற்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. கசிப்பு விற்பனை தடை செய்யப்பட்டிருந்தும், சில இடங்களில் கசிப்பு விற்பனை இரகசியமாக நடைபெறுகிறதாம்.

இதேவேளை வலி வடக்கில் வீடுகளில் வைத்துக் கள் விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. வீடுகளில் வைத்துக் கள் விற்பதால் விரும்பத்தகாத சம்பவங்களும், சச்சரவுகளும், ஏற்படுவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டு, புலிகளின் சம்மதத்துடன் வீடுகளில் கள் விற்பனை செய்வது 12ஆம் திகதி முதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோதக் கள், சாராய விற்பனையைத் தடை செய்வதால் தெங்கு பனம் பொருள் உற்பத்திச் சங்கங்களின் வருமானம் அதிகரிக்கும்.

## குடியேற்றம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றப் பிரசினைபற்றிய ஒரு கேள்விக்கு கலாநிதிபாலசிங்கம் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

## மாணவர்கள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் செய்து வருவது மக்கள் அறிந்ததே இவர்கள் கடந்த இரண்டு நாட்களாக யாழ் சொழுப்பு புகையிரதங்களில் பெரும் இடைஞ்சலை உண்டுபண்ணுவதாக

மாதம் 18 ஆந் திகதி நடை பெற்றது.

வவுனியா 'றெக்ரேஷன் இளப்பில்' நடைபெற்ற இக் கூட்டத்திற்கு இளைப்பாறிய பிரதம தபால் அதிபர் எஸ். அரியநாயகம் அவர்கள் தலைமை தாங்கினார்.

தலைவராக, ஏ. பரமானந்தம், செயலாளராக எம். அல்பிறேட், பொருளாளராக பி. தர்மசீலன் காப்பாளராக எஸ் மயில்வாகனம் ஆகியோர் நடப்பு வருட நிர்வாக உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர். (தி

## 64 கோடி - -

(5-ம் பக்கத் தொடர்ச்சி...)

கள் நினைத்ததாகத் தெரிகிறது.

ஆகவே இந்துஜாக்களுடன் எந்தப் பேரமும் கூடாது என்று அரசு அதிகாரிகளுக்குக் கூறப்பட்டது. ராஜீவ் பிரதமரான பிறகும் இந்த 'பிளாக் லிஸ்டிங்' நீடித்தது.

வி. பி, சிங் இராணுவ மந்திரியானபோது, ஜெர்மன் கப்பல்களுக்குத் தரப்பட்ட விலை மிக அதிகம் என்பது பற்றி ஆராய்ந்தார். அப்போதுதான் விலை கூடியதற்குக் காரணம் கமிஷன் தான் என்றும், அதற்கான கமிஷன் ஏஜெண்டுகள் இந்துஜாக்கள் என்றும் தெரியவந்தது. உடனே விசாரணைக்கு உத்தரவிட்டார்.

இதன் பிறகு இந்துஜாக்கள் பழைய பேர பாக்கி முப்பது கோடி ரூபாயைக் கொடுத்தனுப்பி ஏ. ஈ. சர்வீஸஸ் சமரசம் செய்து கொண்டு விட்டதாக அருண் நரு முதலியோர் கருதுகிறார்கள்.

ஆறாவது ஸ்விஸ் கணக்கில் உள்ள பணத்தில் ஏ-320 ஏர் பஸ் பேரம், வெஸ்ட்லாண்ட் ஹெலிகாப்டர் பேரம் என்று பிற பேரங்களிலிருந்தும் வந்த பணம் இருக்கலாம் என்று கூறுகிறார்கள்.

இப்போது சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பின் தலைவராக கனடாவில் உள்ள சித்துவிடமும், இந்தப் பேரங்கள் நடந்தபோது இராணுவ இலாகா அதிகாரிகளாக இருந்த பட்நகர். காப்டன் கொண்டத் முதலியோரிடமும் சி. பி. ஐ. விசாரணை நடத்தி வருகிறது.

அடுத்த சில மாதங்களுக்குள்ளாக ஆறாவது கணக்கின் மர்மங்கள் அதிகார பூர்வமாக வெளிவருவதையொட்டித்தான் வி. பி. சிங்கின் அரசியல் எதிர்காலமும், ராஜீவின் அரசியல் எதிர்காலமும் அமையக்கூடும்.

நன்றி; ஜூனியர் விகடன்
9-3-90

## இவர் தற்கொலை

(பூநகரி)

ஒரு வாரத்தினுள் பூநகரியில் இருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ளனர். இருவரும் இளம் வயதினராவர். பூநகரி மட்டுவில் நாட்டைச் சேர்ந்த பூ. அன்பழகி (வயது 22) என்பவரும் பூநகரி கறுக்காய்த் தீவைச் சேர்ந்த வி. ரகுநாதன் (வயது 21) என்பவருமே கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டவராவர். மாணமான ரகுநாதன் என்பவர் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் க. பொ. த. ப. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது

## இலங்கையில்.-.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி )

அவர் தொடர்ந்து பேசுகையில் இந்திய அமைதிப்படை இலங்கையில் தமிழருக்குப்பல இன்னல்களை விளைவித்து, ஆயிரக்கணக்கான தமிழர்களையும் கொன்றுள்ளது. ராஜீவ் காந்தி இந்திய இராணுவத்தை 1989 டிசம்பருக்கு முதல் மீள அழைப்பதாகத் தெரிவித்துமுள்ளார். அரசாங்கம் இலங்கையிலிருந்து இந்திய இராணுவத்தைத் திரும்பி அழைக்க எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என்றார்,

இலங்கையில் தமிழ் இளைஞர்களைப் பிடித்து கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கி, தமிழ் தேசிய இராணுவத்தை உண்டாக்கி, அதற்கு இந்தியாவிலிருந்து ஆயுதங்களையும் றோ அனுப்பியது என்றார் கோபலசாமி.

## 25000 விண்ணப்பம் ....

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது இவ்வலுவலகத்தினால் தற்காலிகமாக மறு அறிவித்தல் கிடைக்கும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் பத்திரங்களைக் கூடிய விரைவில் பெற்று விண்ணப்ப தாரர்களுக்குரிய வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தகுதி வாய்ந்த அதிகாரிகள் ''ஈழ நாதத்திற்கு'' அறியத் தந்துள்ளார்கள்.

வேலைகளை விரைவுபடுத்த பதில் மேலதிக மாவட்டப் பதிவாளராக திரு. ஏ. பொன்னம்பலம் நியமிக்கப்பட்டுள்ளார். (19)

# வீடுகளில் கள், சாராயம் விற்பனைக்குத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியை அண்டிய முலவைப் பகுதியில் வீடுகளில் வைத்துக் கள், சாராயம் விற்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. கசிப்பு விற்பனை தடை செய்யப்பட்டிருந்தும், சில இடங்களில் கசிப்பு விற்பனை இரகசியமாக நடைபெறுகிறதாம்.

இதேவேளை வலி வடக்கில் வீடுகளில் வைத்துக் கள் விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. வீடுகளில் வைத்துக் கள் விற்பதால் விரும்பத்தகாத சம்பவங்களும், சச்சரவுகளும், ஏற்படுவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டு, புலிகளின் சம்மதத்துடன் வீடுகளில் கள் விற்பனை செய்வது 12ஆம் திகதி முதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோதக் கள், சாராய விற்பனையைத்தடை செய்வதால் தெங்கு பனம் பொருள் உற்பத்திச் சங்கங்களின் வருமானம் அதிகரிக்கும்.

# காசாளர் லீவு அகதி நிவாரணமில்லை

(வவுனியா)

வவுனியா மாவட்ட மக்களுக்கு வவுனியாக் கச்சேரியில் அமைந்துள்ள காசாளர் காரியாலயத்திலேயே அகதி நிவாரணம் கொடுக்கப்பட்டு வருகிறது.

சடந்தவாரம் காசாளர் லீவில் சென்று விட்டதால், அகதி நிவாரணம் பெற்றுக் கொள்ள வந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

மேற்படி வவுனியாக் கச்சேரியில் ஒருவரே காசாளராக இருந்து வருவதால், அவர் லீவில் செல்லும் தினங்களில் பாதிப்படைந்த மக்கள் தமக்கான நிவாரணக்கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் திண்டாடுகின்றனர். (தி)

# வவுனியாவில் நெல் விலை வீழ்ச்சி நடவடிக்கை எடுக்க

(வவுனியா)

வவுனியாவில் நெல்லின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. பொறுப்பானவர்கள் அக்கறை எடுத்து நெல் கொள்வனவு செய்வதற்கு நிர்ணய விலை ஒன்றை அறிவிக்க வேண்டும் என்று விவசாயிகள் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

ஐ நூறு ரூபாவிற்கு குறைவாகவே வர்த்தகர்களினால் மூடையொன்று கொள்வனவு செய்யப்படுவதாகவும், விவசாயப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ள இக்காலத்தில் நெல்லை குறைந்த விலைக்கு கொள்வனவு செய்வது வருத்தமளிக்கிறது. என்றும் அக்குழு கவலை தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க இவ்வருட காலபோகத்தில் வவுனியா மாவட்டத்தில் நெல் விளைச்சல் அதிகரித்திருக்கிறது.

சில வருடங்களின் பின்னர் இம் முறை வவுனியா மாவட்டத்தில் நெல் விளைச்சல் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## இடிதாக்கி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பவரே இடிவிழுந்து இறந்தவராவர். இந்த இடியின் காரணமாக அவரது மனைவி பாதிப்படைந்து தற்போது செட்டிகுளம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க, சில தினங்களுக்கு முன்னர் மன்னார் மாவட்டத்தில் உள்ள குஞ்சுக் குளம் பகுதியில் இடிவிழுந்து மூன்று பேர் அதே இடத்தில் கருகி மாண்டனர்.

வன்னிப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருபது குறிப்பிடத்தக்கது. (தி)

## டமராச்சியில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணல்காடு ஆகிய ஏழு கிராம சேவையாளர் பிரிவுகளே தற்போது புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

கடந்த 15ம் திகதி தொடக்கம் இப் புதிய கிராமசேவையாளர் பிரிவுகள் நடைமுறைக்கு வந்துளன. (36)



நேற்று கோண்டாவிலில் திறந்துவைக்கப்பட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் காரியாலயத்தின் முன்றலில் அமைந்துள்ள மாவீரர்களின் நினைவுஸ்தூபி

## சகல மக்களும்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. அவர்கள் இரு கண்ணோட்டத்தில் பார்க்கின்றனர். அதாவது கடந்தகால அரசியல் தலைவர்களின் தேர்தல் கட்சி போல பார்க்கின்றனர். மற்றது உணர்வுகள் அதிகாரங்களை எப்படிப் பயன் படுத்துவது என்று தெரியாதும் இருக்கின்றனர்.

உண்மையில் கட்சி நிர்வாக அமைப்பு அனைத்து மக்களும் இணைந்து செயலாற்றக்கூடியதாகவே அமைந்துள்ளது. சகல மக்களும் கட்சியில் சேர்ந்து செயற்படுவதன் மூலமே எமது எதிர்பார்ப்பை நிறைவேற்றமுடியும் என்றார்.

உண்ணா நோன்பிருந்த தியாகி திலீபனின் தந்தையார் திரு. இராசையா குத்துவிளக்கேற்றி இவ் வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

யாழ். பிராந்தியப் பொறுப்பாளர் திரு. பானு தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடியையும், அரசியற் பொறுப்பாளர் திரு டொமினிக் கட்சிக் கொடியையும் ஏற்றிவைத்தனர்.

இங்கு அமைக்கப்பட்ட மாவீரர் நினைவுத் தூபியை இளம் புலி காப்டன் மில்லரின் தாயார் திரை நீக்கம் செய்து வைத்தார்.

அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன்பாலசிங்கம் உரையாற்றுகையில்:

இன்றைய தினம் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தினமாகும். ஏனெனில் இன்று தான் வட மாகாணத்தில் நிலை கொண்டிருந்த இறுதி இந்திய ஜவான்கள் காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து இந்தியா புறப்படுகிறார்கள். அதேபோல திருக்கோணமலையிலிருந்தும் மேலுமொரு தொகுதி இந்தியப்படை வெளியேறுகிறது. எனவேதான் இன்றைய தினத்திலும் யாழ் மாவட்டத் தலைமைக் காரியாலயம் திறந்து வைக்கப்படுவதால் வரலாற்று முக்கியத்துவமான நாள் எனக் கூறவேண்டும்.

தொடர்ந்து பேசிய திரு. பாலசிங்கம்;

விடுதலைப் போராட்டத்தில் அனைத்து மக்களையும் நேரடியாக பங்கு கொள்வதற்காகவே இந்தக்கட்சி அமைப்பு உருவாக்கப்பட்டது. வரலாற்று அத்தியாயத்தில் பொது மக்களின் பங்குதான் முக்கியமானது. இதனை உணர்ந்து சகல மக்களும் உறுதியுடன் இணைந்துசெயற்படவேண்டும்.

அரசுடனான பேச்சுவார்த்தை பற்றிக் குறிப்பிட்ட அவர் எமது உரிமைகள் வழங்கப்பட வேண்டும், பேணப்பட வேண்டும் என்ற நிலையில் ஜனாதிபதி பிரேமதாஸா மிகவும் உறுதியாக இருக்கின்றார் என்றார்.

யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. டொமினிக் தமது உரையில் எமது கட்சியில் இணைந்து நேரடியாகச் செயற்பட ஆர்வம் உடையவர்கள் அனைவரையும் இணையும்படி கூறினார்.

இத்திறப்பு விழாவின்போது விடுதலைப் புலிகளின் யாழ். பிராந்திய முக்கியஸ்தர்களான ராஜன்' கிளி, சூசை, ஜேம்ஸ். தினேஸ், ஆஞ்சி மற்றும் பிரதேசப் பொறுப்பாளர்கள், கலாசாரப் பொறுப்பாளர் புதுவை ரட்ணம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

படி கோரியுள்ளோம். இவ்வாறு தரப்படும் விபரத்தினை அடிப் படையாகக் கொண்டு வடக்கு கிழக்கில் வாடும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை அணுகவுள்ளோம் எனவும் தெரிவித்தார்,

## குடியேற்றம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றப் பிரசினைபற்றிய ஒரு கேள்விக்கு கலாநிதிபாலசிங்கம் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

## மாணவர்கள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் செய்து வருவது மக்கள் அறிந்ததே இவர்கள் கடந்த இரண்டு நாட்களாக யாழ் சொரூப்பு புகையிரதங்களில் பெரும் இடைஞ்சலை உண்டுபண்ணுவதாக யாழ். மத்திய புகயிரத நிலைய அதிகாரி ஆர். பயில்வானம் தெரிவிக்கிறார்.

மேலும் அவர் இப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு அந்தந்த கல்லூரி அதிபர்கள் வழமெடுக்க வேண்டும். புகையிரத சேவையில் மாணவர்கள் இப்படி அசிங்க வேலைகளில் ஈடுபடுவது எமது மாணவர்களுக்கு அழகில்லை என்றும் அவர் தெரிவிக்கிறார். (லோ)

## பிள்ளைகளைக்

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

உடற்பயிற்சியுமளித்து வருகிறோம். மேலும் தொழில் நுட்பக் கல்வியும் அளிக்கிறோம். எங்களுடன் வந்து பாதுகாப்பாக இருப்பவர்கள் ஆயுதப் பயிற்சி பெறுவதில் என்ன தவறு ஆயுதம் ஏந்தி நிற்பதில் தான் என்ன பிழை? இப்படிக் கேட்டார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கொழும்பிலிருந்து வெளிவரும் 'வீக் எண்ட்' பத்திரிகை தனது அட்டையில் விடுதலைப் புலிப்போராளிகள் சிலரது புகைப்படங்களை வெளியிட்டிருந்ததுடன் பின்னர் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலும் நிருபர்கள் சிறுவர்களைப் புலிகள் பலவந்தமாகச் சேர்த்துப் பயிற்சியளிப்பதுபற்றிக் கேள்வியும் கேட்டனர்.

இதற்கு அமைச்சர் ரஞ்சன் பதிலளிக்கையில் சிறுவர்களுக்கு ஆயுதப் பயிற்சியளிப்பது உடல் வளர்ச்சிக்கும் உள வளர்ச்சிக்கும் நல்லதல்ல என்று தெரிவித்திருந்தார். இது பற்றி நமது நிருபர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே கலாநிதி பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது